# துறைமுகத்திலிருந்து அரிசி கடத்தல்: பண்ணைக் கடலில் 15 மூடைகள்!

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389
மலர் 12
இதழ் 252
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஐப்பசி 4 ஷஃபான் 19 புதன்கிழமை (21-10-70)

தீபாவளி
மலிவு விற்பனை
(9 - 10 - 70 — 29 - 10 - 70)
உங்கள்
தீபாவளி ஜவுளிகளை
பூர்த்தி செய்துகொள்ள
அரிய சந்தர்ப்பம்!
விக்னேஸ்வரா
புடவை மாளிகை
பஸ் நிலையம் முன்; யாழ்ப்பாணம்.

தீபாவளி விற்பனை!
சிறுவர் முதல் பெரியவர் வரை
எல்லோருக்கும் தேவையான
புடவை வகைகள்
ஏராளமான டிசைன்கள்
எமது கையிருப்பிலுண்டு.
உங்கள் தீபாவளி தேவைகளை
பூர்த்தி செய்துகொள்ள
முந்துங்கள்.
ரமணி ரெக்ஸ்ரைல்ஸ்
66, கே. கே. எஸ். ரேட், -யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம், புதன்

காங்கேசன் துறைமுகத்துக்கு வரும் கப்பல்களில் இருந்து பொருள்கள் கடத்தப்படுவது பற்றி பொலிசாருக்குக் கிடைத்த தகவல்களைத் தொடர்ந்து தீவிர கண்காணிப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

காங்கேசன் துறைத் துறைமுகத்திலுள்ள கப்பலிலிருந்து கடத்தப்பட்டதாகக் கருதப்படும் 15 மூடை அரிசியை பண்ணைத் துறைப்பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. சிவேந்திரன் ஒரு படகுடன் கைப்பற்றினார்.

இதைத் தொடர்ந்து காங்கேசன்துறை பண்ணைக்கடலில் 60 மூடை அரிசிகளுடன் சில படகுகள் கைப்பற்றப்பட்டன,

சென்ற சில தினங்களில் மொத்தம் 80 மூடைகள் கைப்பற்றப்பட்டனவென்று தெரிகிறது.

இக்கள்ளக் கடத்தலைத் தடுப்பதற்கு உணவுக்கட்டுப்பாட்டு இலாகா தக்க ஒழுங்குகளைச்செய்யவேண்டுமெனப் பொலிசார் கேட்டுள்ளதாகத் தெரிகிறது.

# வர்த்தக, தொழில் துறைகளில் டி. ஆர். பி. காரருக்கு இடமில்லை

## ஸ்தாபனங்களை மூடிவிட்டு தாயகம் திரும்பவேண்டும்

### நகை, வைர வியாபாரிகள் மீது முதலில் நடவடிக்கை

கொழும்பு, செவ்

தற்காலிக வாச பர்மிட்டுடன் இலங்கையில் எந்தவித கைத்தொழில் வியாபாரத் தொழிலிலும் அந்நிய நாட்டவர் எவரும் ஈடுபடமுடியாத ஒரு நிலைமைஏற்படப் போகின்றது.

இந்த வகையில் தற்காலிக வாச பர்மிட்டுடன் நகை வியாபாரத்திலும் இரத்தினக்கல் வியாபரத்திலும் ஈடுபட்டிருக்கும் வெளிநாட்டவர்கள் அனைவரையும் அவர்கள் நாட்டுக்கே திருப்பி அனுப்பி விடுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இலங்கையர் மயமாக்கும் கையர்[illegible] இவர் கொள்கையை அரசாங்கம் முதற் [illegible] கட்டமேயென்றும் [illegible] பெருமளவில் [illegible] நிறைவேற்றி முடிக்கும் [illegible] லக்ஷ்மன் ஜெயக் [illegible] இருக்கின்றார்[illegible]

## 13 வயது மாணவனின் பரிதாப மரணம்

### நித்திரைக் குளிகைகளை தவறுதலாக உண்டாராம்

வல்வெட்டித்துறை, செவ்வாய்

நித்திரைக் குளிகைகளைத் தவறுதலாகச் சாப்பிட்ட 13 வயது மாணவன் மயக்கமுற்ற நிலையில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு மரணமானார்.

புற்றளையைச் சேர்ந்த தருமரத்தினம் ஜெயசோதியின் மரண விசாரணையின்போது மேற்கண்ட விபரம் தெரிய வந்தது.

இம்மாணவன் நித்திரைக் குளிகைகளைத் தவறுதலாக சாப்பிட்டதை தொடர்ந்து வி. தர்மரத்தினம், த. சிவக்குமார் ஆகியோர் மரண விசாரணையில் சாட்சியமளித்தனர். மரண விசாரணை அதிகாரி திரு. ஆர். எஸ். இராமநாதன் தற்செயலாக ஏற்பட்ட மரணம் என தீர்ப்பளித்தார்.

## பொன் விழா

யாழ்ப்பாணம், புதன்

அகில இலங்கை ஆசிரியர் சங்க-தேசிய ஆசிரியர் சங்கப் பொன் விழாவை வடமாகாண ஆசிரியர் சங்கம் இன்று கொண்டாடுகின்றது

## யாழ்ப்பாணத்தில் முதற் பரிசு

யாழ்ப்பாணம், புதன்

தேசிய சுவீப்பின் 320வது சீட்டிழுப்பில் முதற் பரிசுக்குரிய டிக்கட் யாழ்ப்பாணத்தில் விற்பனைசெய்யப்பட்டிருப்பதாக யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

— —

## எதிர்ப்பு இயக்கம்

கொழும்பு, செவ்வாய்

செனட்சபையை கலைத்துவிடும் முயற்சிக்கு நாடு முழுவதிலும் எதிர்ப்புத் தெரிவிப்பதற்கான தீவிர பிரசாரம் செய்வதற்கு ஓர் இயக்கம் அமைக்கப்பட்டிருப்பதாகவும், இவ்வியக்கத்தில் சகல இன, மதத்தவர்களும் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பதாகவும் ஒரு செய்தி கூறுகிறது.

செனட்சபையை கலைக்க

## 'வசதி குறைந்தவர்கள் கேட்டால் உதவுவோம்'

### 'லயன்ஸ்'கிளப் டைரக்டர் தகவல்

யாழ்ப்பாணம், புதன்

"வசதி குறைந்த மக்களுக்கு உதவிசெய்வதற்காகவே லயன்ஸ் கிளப் இயங்கி வருகிறது. உதவி தேவைப்படுபவர்கள் எமது ஸ்தாபனத்திற்கு விண்ணப்பித்தால் அவர்களுக்கு உதவி அளிக்கப்படும்" என்று கொழும்பு தெற்கு லயன்ஸ் கிளப் டைரக்டரும், கட்டிடக் கலைஞருமான திரு. துரைராஜா கூறினார்.

யாழ்ப்பாணச் செயலகத்தில்வைத்து வண்ணார்பண்ணையைச் சேர்ந்த திரு. தம்பு என்பவருக்கு மூன்று சில்லு சைக்கிள் ஒன்றை நன்கொடையாக வழங்கியபோது இவ்வாறு சொன்னார்.

அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா, திரு. தம்புவிடம் சைக்கிளைக் கையளித்தார். இவ்வைபவம் நேற்று நடந்தது.

அவர் மேலும் பேசியதாவது:

வலது குறைந்தவர்களானாலுஞ்சரி, வசதி குறைந்தவர்களானாலுஞ்சரி எமது உதவி தேவைப்படுவோர் லயன்ஸ் கிளப்புக்கு விண்ணப்பிக்கலாம், அவர்களின் உண்மையான நிலையைத் தெளிவுபடுத்திக்கொண்டு அவர்களுக்கு எமது ஸ்தாபனம் உதவியளிக்கும். இலங்கையில் 306 லயன்ஸ் கிளப் கிளைகள் உண்டு. கொழும்பில் மட்டும் 50 கிளைகள் இயங்கிவருகின்றன. அங்கத்தவர்களிடமிருந்து சேகரிக்கப்படும் பணத்தைக் கொண்டே இவ்வித உதவியை நாம் செய்துவருகின்றோம். யாழ்ப்பாணத்தில் விரைவில் ஒரு கிளையை ஆரம்பிப்பதற்கு நாம் நடவடிக்கை எடுத்துவருகின்றோம்".

சமூகசேவைப் பகுதி அதிகாரிகளும் இவ்வைபவத்தில் கலந்துகொண்டனர்.

## பண்டாரவன்னியன் விழா

முல்லைத்தீவு, செவ்

பண்டார வன்னியனின் நினைவு விழாவை இம்மாதம் 31ம் திகதி மிகச் சிறப்பாகக் கொண்டாடுவதென பண்டார வன்னியன் கழகம் தீர்மானித்துள்ளது

விழாவில் பிரதம விருந்தினராகத் தபால் தந்தித் தொடர்பு அமைச்சர் திரு.

முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி திறந்த வெளி அரங்கில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் முன்னாள் வவனியா எம். பி. திரு. தா சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறும்.

— —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரண விசாரணையின்போது மேற்கண்ட விபரம் தெரிய வந்தது.

இம்மாணவன் நித்திரைக் குளிகைகளைத் தவறுதலாக சாப்பிட்டதை தொடர்ந்து மயக்கமுற்று விழுந்ததாகவும், உடனடியாகப் பருத்தித்துறை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார் என்றும் விசாரணையில் கூறப்பட்டது.

டாக்டர் எஸ். சிறீரங்கம்,

யாழ்ப்பாணம், புதன்

அகில இலங்கை ஆசிரியர் சங்க-தேசிய ஆசிரியர் சங்கப் பொன் விழாவை வட மாகாண ஆசிரியர் சங்கம் இன்று கொண்டாடுகின்றது. இதில் உதவிக் கல்வி அமைச்சர் திரு துடர்வை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் இன்று காலை விழா நடைபெறுகிறது.

இரத்தினக்கல் வியாபாரத்திலும் ஈடுபட்டிருக்கு[ம்] வெளிநாட்டவர்கள் அனைவரையும் அவர்கள் நாட்டுக்கே திருப்பி அனுப்பி விடுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இலங்கையர் மயமாக்கும் கொள்கையை அரசாங்கம் நிறைவேற்றி முடிக்கும் போது இந்த நாட்டில் வர்த்தகமோ கைத்தொழிலோ இலங்கையரல்லாத வெளிநாட்டவர் ஒருவரின் கையிலும் இருக்க மாட்டாது என்று உதவிப் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சர் திரு லக்ஷ்மன் ஜயக்கொடி இன்று தெரிவித்தார்

தற்காலிக வாசகால பர்மிட்டுடன் இங்கு வாழும் இந்தியர்களின்கையிலிருந்து நகைஇரத்தினக்கல் வியாபாரத்தை நீக்குவது இலங்கையர்மயத் திட்டத்தின் முதற் கட்டமேயென்றும் திரு லக்ஷ்மன் ஜெயக்கொடி கூறினர்.

இறக்குமதி ஏற்றுமதி வர்த்தகத்திலீடுபட்டுள்ள வெளிநாட்டவர்கள் அடுத்தபடியாக அத் தொழிலை விட்டுச் செல்ல வேண்டி வருமென்றும் அவர் சொன்னார்.

வர்த்தகம் கைத்தொழில் துறைகளில் ஈடுபட்டுள்ள அந்நியர்கள்தான் நாணயக் கடத்தல் மோசடி ஆகிய பெரும் குற்றச் செயல்களை பெருமளவில் செய்கிறார்களென்றும் வாழ்க்கைச் செலவு உயர்வுக்கும் இவர்கள் பெருமளவில் [காரண]மாக இருக்கிறார்களென்றும் உதவிப் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சர் கூறினர்.

இந்த அந்நிய வர்த்தகர்கள் தொழில் அதிபர்கள் சார்பில் அரசாங்கத்தை நிர்ப்பந்தம் செய்ய முயற்சிகள் நடைபெறுமென்பதை அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதென்றும் இவர்களுக்கு உதவிசெய்ய முன்வரும் இலங்கையர் எவராலும் அவர் இந்த நாட்டின் துரோகியாகத் தானிருக்க முடியுமென்றும் திரு ஜெயக்கொடி கூறினர்

**உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது**

வர்த்தகம் கைத்தொழில்களிலீடுபட்டுள்ள டி. ஆர். பி, காரர்களுக்கு வர்த்தகத்தையும் கைத்தொழில்களையும் மூடிக்கொண்டு புறப்பட்டுச் செல்லுமாறு கோரும் உத்தரவுகள் குடியேற்ற வெளியேற்ற இலாகாவிலிருந்து அனுப்பத் தொடங்கப்பட்டிள்ளதாக அறியப்படுகிறகி.

டி, ஆர். பி, காரர்களை வர்த்தகத்திலிருந்து அகற்றும் அரசாங்கத்தின் நடவடிக்கையை இலங்கையர் வர்த்தகர் சபைத்தலைவர் திருஞான சிறிசேனநாயக்கா வரவேற்றுப் பாராட்டியுள்ளதுடன் அரசாங்கத்துக்கு நன்றியும் தெரிவித்திருக்கிறார், (சி பி ஏ)

இயக்கம் அமைக்கப்பட்டிருப்பதாகவும், இவ்வியக்கத்தில் சகல இன, மதத்தவர்களும் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பதாகவும் ஒரு செய்தி கூறுகிறது.

செனட்சபையை கலைக்க வகைசெய்யும் மசோதாவை வாபஸ்பெறும்படி மலாய் லீக்கும் அரசாங்கத்தைக் கோரியிருக்கிறது.

31ம் திகதி மிகச் சிறப்பாகக் கொண்டாடுவதென பண்டார வன்னியன் கழகம் தீர்மானித்துள்ளது.

விழாவில் பிரதம விருந்தினராக தபால் தந்தி தொடர்பு அமைச்சர் திரு. செ. குமாரசூரியரை அழைப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

...கும் இவ்விழாவில் முன்னாள் வவனியா எம்.பி. திரு. தா. சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறும்.

## 'தனியார் சொத்துக்களை தேசியமயமாக்க வேண்டும்'

கோட்டை, செவ்.

கடந்த 5 ஆண்டுக் காலத்தில் ஏற்பட்ட இலஞ்ச ஊழல்களை வெளிப்படுத்தி, குற்றவாளிகளுக்குத் தண்டனை அளிக்கவும் பொதுப் பணத்தைக் கொள்ளை கொண்ட தனவந்தர்களின் சொத்துக்களைத் தேசியமயமாக்கி அவற்றைப் பொது நன்மைக்குப் பயன்படுத்தவும் ஒரு விசாரணைக்குழுவைப் பிரதமர் நியமிக்க வேண்டுமென்று ஹபரதுவ எம், பி. திரு. பிறின்ஸ் குணசேகரா நவம்பர்மாதம் 1-ம் திகதி ஆட்சிமன்றத்தில் கேட்கவிருக்கிறார்.

இதற்கான முன்னறிவித்தல் ஒன்றை திரு. குணசேகரா சமர்ப்பித்துள்ளார். 1960-ம் ஆண்டு தொடக்கம் பிரதிநிதிகள் சபை, செனட்சபை உறுப்பினர்களின் சொத்துக்கள் பற்றிய விபரங்களைப் பொதுமக்களுக்கு வெளியிடக்கூடியதாகச் சட்டத்தை இயற்றும்படியும் அவர் தமது முன்னறிவித்தலில் தெரிவித்துள்ளார்.

**தாக்கினாராம்**

### 30 ம் திகதிவரை றிமாண்டில்

முல்லைத்தீவு, செவ்வாய்

முல்லைத்தீவு மலேரியாத் தடைப்பகுதியைச் சேர்ந்த எஸ். மார்க்கண்டு என்பவர் கடமையிலிருந்து திரும்பிக் கொண்டிருக்கும் போது முல்லைத்தீவைச் சேர்ந்த மூவரால் வற்றாப்பளைச் சந்தியில் வைத்துப்பலமாகத் தாக்கப்பட்டாராம். தலையில்பலத்த காயத்துடன் முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் இவர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு பொலிசார் இது சம்பந்தமாக இவரைக் கைது செய்து முல்லைத்தீவு மேலதிக நீதிபதிமுன் ஆஜர் செய்தனர் இவர்களை இம் மாதம் 30-ம் திகதிவரை றிமாண்டில் வைக்கும்படி நீதிபதி உத்தரவிட்டார். இன்னும் ஒருவரைப் பொலிசார் தேடிவருகின்றனர்.

ரூபா 8,36,400 செலவில்

## சுன்னாகம்சந்தைவேலை ஜனவரியில் ஆரம்பம்

யாழ்ப்பாணம் புதன்

சுன்னாகம் பட்டணசபையால் சுன்னாகம் பொதுச் சந்தை. எட்டு லட்சத்து முப்பத்தி ஆறாயிரத்து நானூறு ரூபா செலவில் நவீன முறையில் புதிதாக நிர்மாணிக்கப்பட இருக்கின்றது. இச்செலவும் உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதிக் காரியதரிசியினால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இந்நவீன சந்தை சுமார் பதினைந்து பரப்பில் இரண்டு மாடிக் கட்டடத்தைக் கொண்டதாக இருக்கும். முதலாவது மாடி சந்தையையும், ஐம்பது கடைகளை உள்ளடக்கியதாயும், மேல்மாடி பொதுவரவேற்பு வைபவங்கள் நிகழ்த்தும்மண்டபமாகவும், மேற்குப்பக்கத்தில் ஒரு நவீன மீன்சந்தை கொண்டதாகவும் இருக்கும்.

கட்டட வேலைகள் அடுத்த வருடம் தை மாதம் ஆரம்பிக்கப்படும் என பட்டின சபைத்தலைவர் திரு. பொ. நாகலிங்கம் தெவித்தார்.

......

### மணல் திருட்டு

சுழிபுரம், செவ்.

இப்பகுதியில் கடற்கரை மணல் நாளுக்கு நாள் திருடப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது. சுமார் பத்துக்கு மேற்பட்ட இரட்டைமாட்டு வண்டிகளில் இந்த மணல் கடத்தல் வேலை இரவு பகலாக நடைபெறுகிறதாம்.

## அருவியாற்றுத் திட்ட வேலைகள் துரிதம்

கிளிநொச்சி, செவ்வாய்

மன்னார் மாவட்டம் முசலி காரியாதிகாரி பிரிவிலுள்ள அருவியாற்று நீர்ப்பாசனத் திட்ட வேலைகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. இத்திட்டத்தின்முதற்படியாக அரசாங்க நிலஅளவைப் பகுதியினர் அளப்பனவு வேலைகளிற் பெரும் பகுதியைப் பூர்த்தி செய்துள்ளனர். சுமார் 12,160 ஏக்கர் நிலப்பரப்பு அளப்பனவு வேலைகள் முடிந்துவிட்டதாக அரசாங்க நில அளவைப் பகுதியினர் தெரிவித்தனர். இதில் 8 நில அளவைப் பகுதி உத்தியோகஸ்தர்கள் ஈடுபட்டுள்ளனர் இத்திட்டத்திற்கான மாதிரிப்பட வேலைகள் பெப்ரவரி மாதமளவில் முடிந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது

அருவியாற்றுத் திட்டம் பூர்த்தியடைந்ததும் மன்னார் மாவட்டத்திலுள்ள சுமார் 16,000 ஏக்கர் நிலம் விவசாயத்திற்கு ஏற்றதாகுமென்றும், இதனால் சிறந்த நீர்ப்பாசன வசதிகளை நீர்ப்பாசனப்பகுதியினர் செய்துதவுவர் என்றும் தெரியவருகிறது,

......

### தாமதம் ஏன்?

அம்பன். செவ்.

குடத்தனைக் கிராமசபையின் நிர்வாகத்தின்கீழ் இயங்கிவரும் சனசமூகநிலையங்களுக்கு 1970-ம் ஆண்டுக்குரிய அரசினர் நன்கொடையை குடத்தனைக் கிராமசபை வழங்காது தாமதம் செய்துவருகின்றதாம்.

## கிளிநொச்சி தபால்நிலையம்

கிளிநொச்சி, செவ்வாய்

கிளிநொச்சித் தபாற் கந்தோருக்கான கட்டிடவேலை பூர்த்தியாகும் தறுவாயிலிருக்கிறது. அடுத்த வருடம் ஜனவரி முதல்வாரத்தில் இக்கட்டிடத் திறப்பு விழா நடைபெறும் என்றும் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராக தபால்தந்தி அமைச்சர் திரு. செ. குமாரசூரியர் கலந்துகொள்ளுவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

......

### அச்சு இயந்திரங்கள் கைப்பற்றப்பட்டன

கோட்டை, திங்கள்

சுங்கப்பகுதியினர் நேற்று முன்தினமிரவு பொரளையில் ஒரு அச்சடிக்கும் யந்திரத்தையும் மற்றும் சில இறக்குமதி உபகரணங்களையும் கைப்பற்றியுள்ளனர்.


'ஈழநாடு'

வாரமலர்

21—10—70

சிதம்பரபத்தினியின்

'தெளிவு'

(சிறுகதை)

0 0

இத்தாலியில் விவாகரத்து! கத்தோலிக்க உலகில் திகைப்பு!!

0 0

அ. செ மு.வின்

மாதர் தீங்குரல்

குழலிசை!

0 0

அற்புதம் நிறைந்த அமைதியானஊர்!

(வியாபாரிமூலை பற்றி வை. கா. சிவப்பிரகாசம் எழுதுகிறார்.)

0 0

ஐ. நா. வெள்ளி விழா

மாணவர் மலர், கலை அரங்கம், குடும்பச் சுடர் உட்பட வழமையான அம்சங்கள்.

படிக்கத் தவறாதீர்கள்!


விவசாயிகள் சிரமமின்றி

## விதைகிழங்கும், உரமும் பெறுவதற்கு அறிமுக அட்டை

### விசாரணைக்குழு சிபாரிசு

கோட்டை செவ்வாய்

75 லட்சம் ரூபா செலவு செய்தால் 5 வருட காலப் பகுதியில் 6000 தொன் உருளைக்கிழங்கைப் பெறலாம். உருளைக்கிழங்குச் செய்கையை நல்ல முறையில் அபிவிருத்தி செய்வதற்கு உருளைக்கிழங்குச் செய்கைக் குழு ஒன்று நியமிக்கவேண்டும்.

நாட்டின் உருளைக்கிழங்குச் செய்கையின் பல்வேறு அம்சங்களை ஆராய்ந்து, காணி அமைச்சர் திரு. கொப்பகடுவையிடம் நேற்று அறிக்கை சமர்ப்பித்த ஆட்சி மன்ற விசாரணை குழு தனதறிக்கையில் மேற்கண்டவாறு சிபார்சுசெய்துள்ளது.

மேலும் இக்குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது: உருளைக்கிழங்குச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் எதுவித கஷ்டமும் இன்றிச் சுலபமாக விதைக் கிழங்கு, உரம் ஆகியவற்றை பெறுவதற்கு அவர்களுக்கு அறிமுக அட்டைகள் வழங்கவேண்டும், உருளைக் கிழங்குச் செய்கைக் குழு ஒன்றை நியமிக்கவேண்டும். இக்குழு, பரிசோதனைக் கிழங்கைத் தரம் பிரித்தல், சந்தைப்படுத்தல் ஆகியவற்றைக் கவனிக்கும்.

உருளைக்கிழங்குச் செய்கையில் அடிப்படை மாற்றங்கள் செய்வது குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு காணி விவசாய அமைச்சர் கொப்பகடுவையினால் நியமிக்கப்பட்ட 3 பேர்கொண்ட இக்குழுவுக்கு காணி விவசாய அமைச்சின் ஆட்சிமன்றக் காரியதரிசி திரு. ஏச். எம். நவரத்தின தலைமைதாங்கினர்.

## "பொருளாதார சுபீட்சத்தை உருவாக்க வாரீர்?"

திருக்கோணமலை, செவ்.

பொருளாதாரத்துறையில் சுபீட்சமான யுகமொன்றை உருவாக்குவதற்கு அரசாங்கத்துக்கு ஆதரவு அளிக்கவேண்டுமென்று கப்பல்துறை உல்லாசப் பயண அமைச்சர் திரு. பி. பி. ஜி. கலுகல்ல திருக்கோணமலையில் நேற்று அழைப்பு விடுத்தார்.

அமைச்சர் கலுகல்லைக்கு திருக்கோணமலையில் பிரமாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது. தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றிதெரிவித்து அமைச்சர் பேசுகையில் கூறியதாவது:-

'பொருளாதாரத்துறையில் சுபீட்சமான யுகமொன்றைச் சிருஷ்டிப்பதற்கு அரசாங்கம் துரிதமாக ஈடுபட்டுள்ளது. இந்நாட்டில் வாழு சகல இன மக்களும் வேற்றுமையின்றி அரசாங்கத்திட்டங்களுக்கு ஆதரவு அளித்து அவைகள் செயல்பட உழைக்கவேண்டும்.

'பொருளாதார விடுதலை காண்பதன் மூலம் சகல பிரச்னைகளையும் தீர்க்கலாம் என அரசு நம்புகிறது. இதற்காகப் பல திட்டங்களை வகுத்து செயல்பட ஆரம்பித்துள்ளது.

மூதூர் இறங்குதுறையில் அமைச்சர் கலுகல்லைக்கு மற்றொரு வரவேற்பளிக்கப்பட்டது. அமைச்சர் இங்குள்ள மக்களின் ஆர்வத்தைப் பாராட்டிப் பேசினர்.

உதவித் தகவல் ஒலிபரப்பு மந்திரி ஜனுப் அப்துல் மஜீத் பேசுகையில், 'நாட்டுக்குத் தாம் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யாது, தமது உரிமைகளைக் கோருபவர்கள் நாட்டின் அபிவிருத்திக்குப் பெரிய துரோகம் செய்பவர்களாவார்கள், உரிமையைக் கோருபவர்கள் முதலில் தமது கடமையைச் சரிவரச்செய்து நாட்டின் அபிவிருத்திக்கு உழைக்க முன்வரவேண்டும். பின்னர் தமது உரிமையைக் கேட்பதில் தவறிருக்காது' என்றார்.


தீபாவளிக்காக

எமது ஸ்தாபனத்தில் இன்றும் நாளையும் விற்பனை நடைபெறும்

சீப்சைட்

(வடஇலங்கையின் புகழ்பெற்ற புடவை மாளிகை)

186-188, கே. கே. எஸ். றேட் — யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

தையற் கலையில் அனுபவமிக்க பெண்கள் தேவை. பிறஸ்ஸியர்ஸ் தைப்பதில் திறமை மிகுந்தவர்கள் விரும்பத்தக்கது. கடித மூலம் தொடர்பு கொள்க. N. லோகநாதன், 24/1, பெரியகடை, யாழ்ப்பாணம். 2351

### விற்பனைக்கு

சுண்டுக்குளியில் 5 பரப்புக் காணியில் நவீன வசதிகளுடன் பங்களா விற்பனைக்குண்டு CMS, சென். ஜோன்ஸ், கச்சேரி ஆகியவற்றிற்கு அண்மையிலுள்ளது. விசாரணை-செல்லப்பா 33, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். 2352

ஆவரங்கால் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் புத்தூர் புதிய 6 நெசவு தறிகள் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: ஆவரங்கால் பல. நோ. கூட்டுறவுச் சங்கம், ஆவரங்கால், புத்தூர். 2350


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**புதன் 21—10—70**

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ. அன்ட் 61 மீ.**

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீ. அன்ட் 49 மீ.**

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்ப இசை.

**344 மீ. அன்ட் 61 மீ.**

மாலை 4-25 கல்விஒலி பரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 மாணவர்மன்றம்.

இரவு 6-15 இசைப்பயிற்சி, 6-30 விவசாய நிகழ்ச்சி, 6-45 வீட்டுவாத்தியம், 7-00 வாத்தியஇசை, 7-15 பாட்டு, 7-45 திரைகானம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 நாடகம், 10-00 நேயர் கேட்டவை, 10-30 செய்தித்தொகுப்பு.


### அடைவு நகை ஏல விற்பனவு

யாழ்ப்பாணம் கே. கே. எஸ். வீதி 223 இலக்கக் கடையில் சோம. மு. இராமனுதன் அவர்களிடம் 1-1-67 முதல் 31-12-67 வரைக்கும் வைத்த அடைவுகளில் மீட்கப்படாதவற்றை 19-11-1970 வியாழக்கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் மேற்படி கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். 2523


### முல்லைத்தீவில் உலகசுகாதாரக்குழு

முல்லைத்தீவு, செவ்,

உலக சுகாதார ஸ்தாபனத்தின் கயரோகத் தடைப் பகுதியைச் சேர்ந்த குழுவினர் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் சென்ற ஒரு கிழமையாக கயரோகநோய் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளனர் ''எக்ஸ்ரே'' படம் எடுத்துப் பரிசோதனை செய்து அதற்கான மருந்துகளையும் விநியோகித்து வருகின்றனர்.


**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
போயா நாட்களில் 4 காட்சிகள்
சிவாஜி-பானுமதி நடித்த
**அறிவாளி**

**ஸ்ரீகாலிங்கன்**
இணுவில்
தினசரி 2-30, 6-30, 9-30
சிவாஜி-சௌகார் ஜானகி நடித்த
**படிக்காத மேதை**

**MANOHARA**
Jaffna
Daily 4-45, 7 & 9-45 p m
Poya, Pre-poya 4 Shows
Guiliano Gemma
in
FORT YUMA GOLD
(Scope color)

**REGAL**
Jaffna
Daily 4 Shows
Sydney Poitier
in
TO SIR, WITH LOVE

**ராணி** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர்—லட்சுமி
ஜெயலலிதா — அசோகன்
நடித்த
**மாட்டுக்கார வேலன்**


## தீபாவளி வியாபாரச் சிறப்பிதழ்

# புடவை வாங்கலையோ புடவை!

ஏதாவது விழாவோ பண்டிகையோ அண்மிக்கின்றபோதெல்லாம் யாழ் நகர் களைகட்டத்தொடங்கிவிடுகிறது. இந்துக்களின் பண்டிகைகளாயிருந்தாலென்ன, கிறிஸ்தவ பண்டிகைகளாயிருந்தாலென்ன, இஸ்லாமிய பெருநாட்களாயிருந்தாலென்ன விழாக்கள் ஆரம்பிக்கப் பல வாரங்களிருக்கும்போதே நகரம் கலகலக்கத் தொடங்கிவிடுகிறது. விண்ணில் தாரகைகள் தாம் மண்ணில்வந்து நடமாடுகின்றனவோ எனும்படியாக, நேற்றுவரை வீட்டில் அடைபட்டுக்கிடந்த அழகு மாதர்கள் அணியணியாகத்திரண்டு தம்சிரிப்பொலியாலும் கிண்கிணி ஒலியாலும் பட்டணத்தைச் சலசலப்புக்குள்ளாக்கிவிடுகின்றனர்.

தீபாவளி, தைப்பொங்கல் சித்திரைப் புதுவருடம் நத்தார், கிறிஸ்தவ வருடப்பிறப்பு, ஈஸ்டர் ஞாயிறு, றம்ஸான் ஹஜ்ஜு என நாட்டின் முக்கிய இனங்களின் முக்கிய பண்டிகைகள் நெருங்குகின்றன வென்றால் தம் அபிமான வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யவேண்டுமே என்னும் ஆவலால் நகரத்து வர்த்தகப் பெருமக்கள் பல சிரமங்களின் மத்தியிலும் பலவகைப்பட்ட ஆடை ஆபரணப் பொருட்களையும் சேகரித்துத் தம்வர்த்தக நிலையங்களை அழகு செய்கின்றனர்.

தீபாவளியை முன்னிட்டு யாழ். நகர வியாபாரஸ்தலங்கள் தயாராகிவிட்டதையும் ஆடவரும் அரிவையரும் சிறுர்களும் பண்டிகையைக் கொண்டாட உஷாராகிவிட்டதையும் கடந்த சில தினங்களாகவேகாணக்கூடியதாகவுள்ளது. காலையிலிருந்து முன்னிரவுவரை யாழ்ப்பாணப் பட்டணம் சுவர்க்கம்போல் காட்சியளித்துக்கொண்டிருக்கிறது. சுமாராக இன்னும் ஒரே வாரம் தான் உண்டு தீபாவளிக்கு.

எல்லாவியாபார ஸ்தாபனமும் தீபாவளிக்குத் தமது வாடிக்கையாளர்களைத்திருப்திப்படுத்தத்தகுதிகண்டுள்ளபோதிலும் நகரின்முன்னணி புடவை ஸ்தாபனங்களான எஸ் ஆர். எஸ் ஜவுளி மாளிகை, முனீர்ஸ், ராஜ்கோபல்ஸ், செ. காசிப்பிள்ளை அன் கோ, ரமணி ரெக்ஸ்ரைல்ஸ், விக்னேஸ்வரா, கணேசன் ஸ்ரோர்ஸ், கணேசானந்தாஸ், ரொலறம்ஸ், சீப்சைட் ... சமாஜத்தின் மின்தறிகளில் உருவாக்கப்பட்ட சேலைகளாகவே இருக்குமென்று நம்பிக்கையாகச் சொல்லலாம். பாவாடைத் துணிகள், வேட்டிகள் ஆகியபல பல பொருள்களை உற்பத்தி செய்து தள்ளும் வலிமேற்கு பலநோக்கக் கூட்டுறவுசமாஜம் இப்பொதுமு சிறந்த ஷேட்டுகளையும் தயாரிக்கிறது. அதிக லாபம் எங்கள் நோக்கமல்ல. நல்லரக துணிமணிகளை மலிவு விலையில் பொதுமக்களுக்குக் கிடைக்கச் செய்வதுதான் எங்கள் நோக்கம் என்று கூறுகின்றனர். சமாஜத்தினர். 'வலிகோப்டெக்ஸ்' என்பது அவர்களது வர்த்தகக்குறி.

### எஸ். ஆர். எஸ். ஜவுளிமாளிகை

கே. கே. எஸ் வீதியைச் சேர்ந்த எஸ். ஆர் எஸ் ஸ்தாபனத்தில் இப்பொழுது 'சாந்தி நிலையம்' என்று அழைக்கப்படும் சேலைகள் நன்முக விற்பனையாகிக்கொண்டிருக்கிறன்ன அத்துடன் எஸ், ஆர். எஸ் நெசவு நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்ட 'காந்தி' நாலுமுழ வேட்டிகள், மற்றும் குறி, பரமாஸ் எட்டு முழ வேட்டிகள், பட்டுவேட்டிகள் சால்வைகள் நெசவு மணிப்புரி நூல் டெக்கா சேலைகள் யாவும் மிகவும் குறைந்த விலைகளில் இங்கு விற்பனை செய்யப்படுகின்றன. சிறுவர்ளுக்கான கவுன் ரீசேட் வகைகளும் மற்றும் சேட் வகைகளும் குறைந்த விலைகளில் விற்பனையாகின்றன.

### சீப்சைட்:

கே. கே கே எஸ் வீதியிலுள்ள சீப்சைட் ஸ்தாபனத்தார் புடவைவியாபாரத்தில் மிகப்பழையவர்கள் சேவையில் பழையவர்களாயிருந்தபோதிலும் நாகரிகத்திற்கேற்ப நங்கையரும் ஆடவரும் விரும்பும் வகையில்ரகரகமானசேலைகளையும் பிளவ்ஸ் துணிகளையும் வேட்டி சால்வைகளையும் லோங்ஸ் துணிகளையும் றெடிமேட் [illegible]ட்டுகளையும் தீபாவளியை [illegible]ன்னிட்டு மலிவு விலையில் விற்பனை செய்து கொண்டிருக்கிறுர்கள்.

### விக்னேஸ்வரா

யாழ். [illegible] நிலையத்தின் [illegible] விக்னேஸ்வரா ஜவுளி நிலையம் உள்ளது. ... விலையில் இங்கு ஜவுளிவகையருக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

### செ. காசிப்பிள்ளை அன் கோ

'ஆற்பாதி ஆடைபாதி' இது நாகரிக காலத்துப் புதுமொழியல்ல. நீண்ட காலமாகவே நிலைத்துவந்த முதுமொழி. மனிதனின் மானத்தைக் காப்பதற்கு மட்டும் ஆடை என்ற நிலையல்ல இன்றையநிலை. கவர்ச்சி காலத்தின் புதுமை இவற்றையெல்லாம் கருத்தில் வைத்தே உடை உடுக்கிறோம்.

காலத்துக்கேற்ற நல்ல உடைகளை, துணிவகைகளை வழங்குவதில் முப்பதாண்டு காலமாக யாழ்ப்பாணப் பிராந்தியத்தில் முன்னணியில் திகழ்வது இந்த ஸ்தாபனம். எந்தவகையான உடைகளையும் நிதான விலையில் வழங்கி வாடிக்கைகாரரிடம் தனிமதிப்பைப்பெற்ற ஸ்தாபனமிது.

### ரமணி ரெக்ஸ்ரைல்ஸ்

ரமணி ரெக்ஸ்ரைல்ஸ் ஸ்தாபனம் யாழ். கே. கே. எஸ் வீதியிலுள்ளது தமது வாடிக்கையாளரின் திருப்தியே தமது திருப்தியெனக் கருதும் ரமணி ரெக்ஸ்ரைல்ஸார் தீபாவளி கொண்டாடும் தமது ஆதரவாளர்களைத் திருப்திசெய்யும் நோக்கத்துடன் பல்வேறு வகைத் துணிகளை ஆடவர் பெண்டிர் சிறுவர்களுக்குமாகஏராளமாகக் கையிருப்பில் வைத்துள்ளனர். பிறின்டட் அன்பிளேன் நூல், சில்க் சாறிகள்வகையான பிளவ்ஸ் துணிகள் ஆடவர்களுக்கு எல்வாவகைறெடிமேட்சேட்டுகள் லோங்ஸ் துணிகள் வேட்டி சால்வைகள் தீபாவளி விசேஷ விற்பனையில் மலிவு விலையில் இங்கு கிடைக்கும்.

### கணேசன்ஸ்ரோர்ஸ்:

கே. கே. எஸ் வீதியிலுள்ள கணேசன்ஸ் ஸ்ரோர்ஸ் ஜவுளிநிலையத்தில் கவர்ச்சிகரமான டிசைன்களிலும், பிளேனிலும் பல்வேறு கண்கவர் நிறங்[illegible]ளில் நைலெக்ஸ் மற்றும் [illegible] சில்க் சாறிகள், வொயில் சாறிகள் கைத்தறி சாறிகள், விதவிதமான பிளவ்ஸ் துணிகள், ஆடவர்களுக்கு வேட்டிகள் சால்வைகள், லோங்ஸ்துணிகள் குழந்தைகளு[illegible]கேற்ற மெல்லிய சில்க் [illegible]ணிகள் ...னர். தீபாவளியை முன்னிட்டு விசேஷமாக எல்லாத்தினுசுகளுக்கும் இவர்கள் விலை குறைத்து விற்பனை செய்கிறுர்கள். முனீர்ஸ் யாழ். நகரில் பிரபலம் பெற்ற பெரிய ஜவுளிஸ்தாபனமாகும்.

### ராஜ்கோபால்ஸ்

ராஜ்கோபால்ஸில் இல்லாதது ஒன்றுமில்லையென்று சொல்வார்கள். சேலைகளா, சேட்டுகளா, வேட்டிகளா, வேறு என்ன வேண்டும். பெயர்பெற்ற ஸ்தாபனம் இது. இடம் சிறிது தான் ஆனால் இருக்கும் பொருள்களோ அதிகம். மூர்த்தி சிறிதென்றாலும் கீர்த்தி பெரிதென்னும் பழமொழி ராஜ்கோபால்ஸுக்குப் பொருத்தம்தான். போய்ப் பாருங்களேன்!

### கணேசானந்தாஸ்

கே. கே. எஸ். வீதியில் முட்டாசு கடைச்சந்திக்கு மிக அண்மையாக உள்ள கணேசானந்தாஸ் ஜவுளி விற்பனை நிலையத்தில் தீபாவளி கொண்டாடும்யாவரும் அவரவர் விருப்பத்திற்கும் பொருள்நிலைக்குமேற்ப துணிவகைகளைத் தெரிவு செய்துகொள்ளலாம். ஆண் பெண்குழந்தைகள் யாவருக்கும் ஏற்ற எல்லாவித புடவைதினுசுகளும் இங்கு தீபாவளியை முன்னிட்டு மலிவு விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

### ஆறுமுகம் நல்லதம்பி

சுமார் கால் நூற்றுண்டு காலமாக யாழ்நகரில்சேவையாற்றிவரும் இந்த ஸ்தாபனத்தார் தரமான நகைகளுக்கு உத்தரவாதமுடையவர்கள் விரும்பிய டிசைன்களில் றெடிமேட்டாகவும், ஓடருக்கும் நகைகள் பெற்றுக்கொள்ளலாம்.

### தேவன்ஸ் இன்டஸ்றீஸ்

ஜலதோஷம் தலைவலி சீதளநோய்களைப் போக்க உபயோகிக்கும் தேவன்ஸ் ஒரிஜினல் மின்சாரத்தைலம் தேவன்ஸ் சீயக்காய்ப்பவுடர் தேவன்ஸ் பற்பொடி, தேவன்ஸ் சாந்துப்பொட்டு தேவன்ஸ் நெல்லிரசம் முதலியன உட்பட ஐம்பதிற்கு மேற்பட்ட பொருட்களை உற்பத்திசெய்யும் ஸ்தாபனம்தான் தேவன்ஸ் இன்டஸ்றீஸ். இலங்கையில் பல வருஷங்களாகப் புகழ்பெற்று விளங்கும் இந்நிறுவனத்தின் உரிமையாளர் திரு ...

### பரமேஸ்வரா வெற்றி

திருநெல்வேலி, திங்கள்

யாழ்ப்பாணம் உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்று வரும் 'பி' பிரிவுக்கான போட்டியில் யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியும் ஏழாலை மத்திய மகாவித்தியாலயமும் மோதிக் கொண்டதில்பரமேஸ்வராக்கல்லூரி 7 கோல்களால் வெற்றியீட்டியது. பரமேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. வில்வராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

### மகாஜனு வெற்றி

மாவிட்டபுரம், புதன்

தெல்லிப்பழை மகாஜனு கல்லூரிக்கும், யூனியன் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்ட மோதலில் 3-ம் பிரிவில் மகாஜனு 2—0 கோல்களால் வெற்றி பெற்றது.

இவ்விரு கல்லூரிகளின் 2-ம் பிரிவுப் போட்டியில் இரு தரப்பினருக்கும் வெற்றி தோல்வியின்றி முடிந்தது. யூனியன் கல்லூரி மைதானத்தில் இப்போட்டிகள் நடைபெற்றன.


எமது வாடிக்கையாளர்களுக்கும் அன்பர்களுக்கும்
**எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்!**

தங்க வைர நகைகள்
தரத்திற்கும் நியாய விலைக்கும்
பெயர்பெற்ற ஸ்தாபனம்
**ஆ. நல்லதம்பி**
(நங்கையர் விரும்பும் நவீன டிசைன் ஆபரணமாளிகை)
75, கன்னுதிட்டி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 664 தந்தி: கமலம்

இம்முறையும்
**தீபாவளிக்கு**
வலிகோப்டெக்ஸ்
ஃ வண்ணச் சேலைகள் ஃ பாவாடைத்துணிகள்
ஃ வேட்டிகள் ஃ தரமான ஷேட்டுகள்
அணிந்து கொண்டாடுங்கள்
**வலிமேற்கு பலநோக்க கூட்டுறவு சமாசம்**
சங்கானை.
தொலைபேசி: 525 மானிப்பாய்.

எமது உற்பத்திப் பொருட்களை




வாங்கிப் பாவிக்கும்
வாடிக்கையாளர்
அனைவருக்கும்
எமது
தீபாவளி
வாழ்த்துக்கள்!
**தேவன்ஸ் இன்டஸ்றீஸ் & மில்ஸ்**
51, மானிப்பாய் வீதி, [போன்: 7119] யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தித்தொகுப்பு.

TO SIR, WITH LOVE

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்

எம்.ஜி.ஆர் — லட்சுமி
ஜெயலலிதா — அசோகன்
நடித்த

# மாட்டுக்கார வேலன்

## யாழ். வின்ஸர் தின.ரயில்

தினசரி 4 காட்சிகள்

ஜெமினிகணேசன் — காஞ்சனா
நடித்த

# சாந்தி நிலையம்

7-வது வாரம்

## வெலிங்டன் யாழ்நகர்

(2-30, 6-30, 9-30) போயா தினங்களில் 4 காட்சிகள்

தாய்க்குலத்தின் பெருமைக்கும் தமிழகத்தின்
மாண்புக்கும் உதாரணமாய் வாழ்ந்த விஜயாவின்
உள்ளத்தை உருக்கும் கண்ணீர் காவியம்.
உணர்ச்சி ஓவியம் . . .

★ ஏ.வி.எம்.ராஜன்

இந்திய ஜனாதிபதியின் 'ஊர்வசி' பரிசுபெற்ற ★ சாரதா

காஞ்சனா, முத்துராமன், ரி. எஸ். பாலையா,
நாகேஷ், சுந்தரராஜன், பேபி ரோஜாரமணி
நடித்த

ஸ்ரீ விநாயகா சுப்ரீயா கம்பைன்ஸ்

# துலாபாரம்

(தமிழ்)

டைரக்ஷன்: வின்ஸன்ட்
(1969-ம் ஆண்டின் சிறந்த இயக்குவர்)

கெப்பிட்டல் (கொழும்பு) — பிளாஸா (வெள்ளவத்தை)

வெகு விரைவில் வெலிங்டன் யாழ்ப்பாணம்

★ சிவாஜி ★ சௌகார் ஜானகி
சிவகுமார், வாணிஸ்ரீ, பாரதி
மற்றும் பலர் நடித்த
ஏ. வி. எம். புரடக்ஷன்ஸ்

# உயர்ந்த மனிதன்

[1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய பாராட்டைப் பெற்றது]

எஸ். ஆர். எஸ் ஜவுளி மாளிகை, முனீர்ஸ், ராஜ் கோபல்ஸ், செ. காசிப்பிள்ளை அன் கோ, ரமணி ரெக்ஸ் ரைல்ஸ், விக்னேஸ்வரா, கணேசன் ஸ்ரோர்ஸ், கணேசானந்தாஸ், ரொலறம்ஸ், சீப்சைட், டயரும்ஸ், ஆறுமுகம், நல்லதம்பி நகை மாளிகை நல்லூர் பிறதர் மெஷின் ஏஜென்ஸீஸ் முதலிய ஸ்தாபனத்தார் தம் வாடிக்கையாளரின் தீபாளித் தேவையைப் பூர்த்திசெய்வதில் அதிக ஆக்கறை காட்டி வருகின்றனர்.

### ரொலறம்ஸ்

பெண்களுக்கு றெடிமேட் புறெக், றெடிமேட் புளவ்ஸ் றெடிமேட் சேட், லங்கா மணிப்புரி சேலைகள், லங்கா கைத்தறி சேலைகள், பிளேன் போடர்பிறின்டெட் நைலெக்ஸ் சேலைகள், ஆண்களுக்கு பரகன், குண்டன்மால்ஸ் கெலோன், சின்டெக்ஸ் வெலோனு, ஜே. பி. சூட்டிங்குகளும், லிண்டன் டியூரே, ஒக்ஸ்போட், டிப்ளோமற் இன்னும் அநேக சேட்வகைகளும் சிறுவர்களுக்கு றெடிமேட் களிசான்கள், சேட்டுகள் மற்றும் சன்சூட், பேபிசூட் முதலியனவும், தீபாவளியை முன்னிட்டு யாழ் மெயின் வீதியிலுள்ள ரொலறம்ஸ் ஸ்தாபனத்தார் மலிவுவிலையில் ஏராளமாக விற்பனை செய்கிறார்கள்.

### டயரும்ஸ்

இவர்களுடன் போட்டி போடுவது போல் அதே வீதியிலுள்ள டயரும்ஸ் ஸ்தாபனத்தாரின் தீபாவளி விற்பனை அமைந்துள்ளது. பெண்களுக்குத்தேவையான கைத்தறி சில்க்சாறிகள் பிளவ்ஸ்கள் பிறெஸியர்கள் ஸ்கேட்கள், சிறுவர் உடைகள் ஆடவர்களுக்கான றெடிமேட் லோங்ஸ், சேட்கள் மற்றும் பல்வேறுவித துணிவகைகளும் இங்கு தீபாவளிக்கென விசேஷமாக விலைகுறைத்து விற்பனையாகின்றன.

### வலி கோப்டெக்ஸ்

திருவிழாக்களிலும் பெரிய வைபவங்களிலும் கண்ணைக் கவரும் வண்ணச் சேலைகள் உங்கள் கருத்தைக் கவருகின்றனவா? அப்படியானால் அவை பெரும்பாலும் வலிமேற்கு பல நோக்குக் கூட்டுறவுச்

## வெஸ்லிசினிமா

மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
போயா, பிரீபோயா 2-30
எம். ஆர். ராதா — ஸ்ரீரஞ்சனி
நடித்த

## ரத்தக்கண்ணீர்

முன்னிட்டு மலிவு விலையில் விற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள்.

### விக்னேஸ்வரா

யாழ். பஸ் நிலையத்தின் முன்பாக விக்னேஸ்வரா ஜவுளி நிலையம் உள்ளது. பல்வேறு ரக கைத்தறி சேலைகளும் சில்க் சாறிகளும் நவீன ரகபிளவ்ஸ் துணிகள் சிறுவர்களுக்கும் குழந்தைகளுக்குமான களிசான் மற்றும் சட்டைத் துணிகள் ஆடவர்களுக்கு விதவிதமான லோங்ஸ் துணிகள் எல்லாரக றெடிமேட் சேட்டுகள், வேட்டி சால்வைகள் தீபாவளிப்பண்டிகை கொண்டாடும் தமது வாடிக்கையாளரின் திருப்திக்கேற்ற தெரிவுக்காக விக்னேஸ்வரா ஸ்தாபனத்தார் ஏராளமாகவைததுள்ளனர். தீபாவளிக்கெனமிக்க மலிவு நைலெக்ஸ் மற்றும் சில்க் சாறிகள், வொயில் சாறிகள் கைத்தறி சாறிகள், விதவிதமான பிளவ்ஸ் துணிகள், ஆடவர்களுக்கு வேட்டிகள் சால்வைகள், லோங்ஸ் துணிகள் குழந்தைகளுக்கேற்ற மெல்லிய சில்க் துணிகள் இங்கு தீபாவளியை முன்னிட்டு மிகக் குறைந்த விலையில் விற்பனையாகின்றன.

### முனீர்ஸ்

முனீர்ஸ், கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம், தீபாவளிப்பண்டிகையை முன்னிட்டு ஏராளமான ஜவுளி வகைகளை இவர்கள் ஸ்டொக்செய்துள்ளனர். புதுரக சில்க், நைலெக்ஸ் சாறிகள், சேட்டிங் சூட்டிங் வகைகள் றெடிமேட் ஆடைகள் சிறுவர்களுக்கான உடைகள் யாவும் ஏராளமாகத் தருவித்துள்ள மேற்பட்ட பொருட்களை உற்பத்திசெய்யும் ஸ்தாபனம்தான் தேவன்ஸ் இன்டஸ்றீஸ். இலங்கையில் பல வருஷங்களாகப் புகழ் பெற்று விளங்கும் இந்நிறுவனத்தின் உரிமையாளர் திரு ச. சி. மகாதேவன். தமது உற்பத்திகளுக்கு அளிக்கப்படும் ஆதரவு நாட்டின் தொழில் வளர்ச்சிக்குக் கிடைக்கும் ஆதரவாகும் என உரிமையாளர் தெரிவிக்கிறார்.

### அந்தோனிப்பிள்ளை அன் சன்ஸ்

யாழ்ப்பாணம் கே. கே. எஸ் வீதியில் சந்திரா ஸ்ரோர்ஸ் என்ற பெயரில் இயங்கிவந்த ஸ்தாபனமே அந்தோனிப்பிள்ளை அன் சன்ஸ் என்ற பெயரில் சிவன்

4-ம்பக்கம் பார்க்க)


தொலைபேசி: 296 — தந்தி: ரோகிணி — ஆரம்பம்: 1929



# தீபாவளி ஜவுளிகள்

## மலிவு விலைகளில்

தெரிவு செய்வதற்கு

# S. R. S.

## ஜவுளி மாளிகைக்கு

இன்றே விஜயம் செய்யுங்கள்

எஸ். ஆர். செல்லத்துரை

216, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

# மலிவு விற்பனை !!!

## தீபாவளி பண்டிகையை முன்னிட்டு

பிறிபோயாவும், போயாவும்
காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை
கடை திறக்கப்படும்.

# டயரும்ஸ்

54, 60, மெயின்வீதி, யாழ்ப்பாணம்.

வாழ்த்துக்கள்!

## தேவன்ஸ் இன்டஸ்றீஸ் & மில்ஸ்

51, மானிப்பாய் வீதி, [போன்: 7119] யாழ்ப்பாணம்.

யாழ். நகரின் பிரபல ஜவுளி ஸ்தாபனமாகிய
"ராஜ்கோபால்ஸ்" ஸ்தாபனத்தார்
விசேஷமாக

0 கண்கவர் வண்ணங்களில் நைலக்ஸ் சேலைகள்
0 சின்டெக்ஸ் ''ரெற்றேன் பொலிகொட்'' சாறிகள்
0 தரமான வொயில், கான்ட்லூம் சேலைகள்

இன்னும் பலரகங்களில்

0 அப்பலோ ரெற்றேன்
0 டிப்ளோமற் சில்வர் அன்ட் கோல்ட்
0 பிரசிடென்ற்
0 லின்ரன் ''80X20'' சேட் வகைகளும்

சிறுர்களின் அழகை மெருகூட்டும் சன்சூட்,
கவுன்களையும்,
தரமான லேடிஸ் பிளவுஸ் வகைகளையும்,
ஏராளமாகவும், தாராளமாகவும்
உங்கள் எண்ணங்கள் அத்தனைக்கும்
வண்ணங்கள் பல அளித்து
தீபாவளிப் பண்டிகையைச் சிறப்பிக்கின்றார்கள்.

இன்றே விஜயஞ்செய்யுங்கள்

# ராஜ்கோபால்ஸ்

(பிரபல ஜவுளிமாளிகை)

36/1 பெரிய கடை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7168

## எமது தீபாவளி மலிவு விற்பனையில்

உன்னத விலை குறைப்பு
நவீன

★ தனி நிற அச்சடித்த நைலக்ஸ் சாறிகள்
★ சேட்டுகள் (கட்டுப்பாட்டு விலையில் கிடைக்கும்)
★ 100 நம். பருத்தி சேலைகள்
★ பிளவுஸ்கள்
★ சிறுவர் சிறுமிகளுக்கேற்ற உடுப்புகள்
★ வாயில் சேலைகள்

கூப்பன் புடவைகள் கட்டுப்பாட்டு விலையில் கிடைக்கும்

# ஆர்.பி அல்சன்,

178, கே. கே. எஸ். வீதி — யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'தனிச் சிங்கள சட்டத்தை ரத்துச் செய்யவேண்டும்'

ஊரதீவு, செவ்.

1956-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தனிச்சிங்கள சட்டம் புதிய அரசியல் அமைப்பில் வலுவற்றதாக இருக்கவேண்டும் அச்சட்டத்தை ரத்துச்செய்யவேண்டும் தமிழும் சிங்களமும் சரிசமமான ஆட்சியுரிமையை இந்தநாட்டில்பெற வேண்டும்.

அமைச்சர் கொல்வின் ஆர். டி. சில்வாவிற்கு வேலணை கிழக்கு வாலிபர் முன்னேற்ற கழக தலைவர் திரு. மலரவன் அனுப்பியுள்ள மகஜரில் மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

அந்தமகஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

"தற்போது நடைமுறையில் இருக்கும் அரசியல் அமைப்பிலே சிறுபான்மை மக்களாகிய தமிழர்களுக்கு பாதுகாப்பாக இருக்கின்ற இருபத்தொன்பதாவது சரத்து அரசப் பேரவை மேன் முறையீட்டுரிமை ஆகியவற்றை புதிய அரசியல் அமைப்பிலேயும் சேர்க்க வேண்டும்.

உண்மையான சோஷலிஸ சமுதாயம் ஒன்று அமைக்கப்பபட வேண்டும் என்று தாங்கள் மனதார விரும்பினுல் புதிய அரசியல் அமைப்பின் கீழ் மொழிப் பிரச்சினைக்கே இடமிருக்காதவகையில் தங்களால் அரசியல் சட்டம் வரையப்படவேண்டும் தமிழரின் உரிமைகளைப் பாதுகாத்து அவர்கள்தம் திறமைக்கு முதலிடம் வழங்கப்பட்டு அவர்களை தன்மானத்துடன் தலைநிமிர்ந்து வாழ்வதற்குப் புதிய அரசியல் சட்டம் வழிவகுத்தால்தான் இலங்கையில் சோஷலிசம் பூரணத்துவம் பெற்றதாகவும் அமைய முடியும்

திறமைசாலிகளின் அடிப்படையிலேயே சகல தேர்வுகளும் அமையவேண்டும்'

---

சிங்கள பிரமுகர்கள் முயற்சி

## தென் இலங்கையிலும் சமஷ்டிகட்சி ஏற்படும்!

### உடுப்பிட்டி எம். பி தகவல்

மட்டுவில், செவ்.

அகில இலங்கை ரீதியில் சமஷ்டிக் கட்சியை ஆரம்பிக்க கண்டிப்பகுதி பிரமுகர்கள் விரும்புகிறார்கள். இதற்கு முன்னோடியாக அவர்கள் இலங்கை தமிழரசுக்கட்சியில் சேரவும் விரும்புகிறார்கள்.

இத்தகவலை உடுப்பிட்டி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு கே. ஜெயக்கொடி தெரிவித்தார்.

திரு. ஜெயக்கொடி அண்மையில் சாவகச்சேரிக்கு விஜயம் செய்தபொழுது நமது மட்டுவில் நிருபருக்களித்த பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

"கடந்த சிலவாரங்களாக பல அரசியல் சிங்கள நண்பர்களைச் சந்திக்கவும் அவர்களுடன் உரையாடவும் எனக்குச்சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. அவர்களுடன் நான் உரையாடும்பொழுது, சிங்கள மக்கள் இலங்கை தமிழரசுக்கட்சியினது கொள்கைகளைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்று தெரிந்துகொண்டேன்.

தமிழரசுக்கட்சியின் கொள்கைக்கு முற்றிலும் மாறான துர்ப்பிரசாரங்களை சிங்கள மக்கள் மத்தியில் பரப்புவதாகவும், தமிழரசுக்கட்சி நாட்டைப் பிளவுபடுத்தவும், சிங்களமக்களிடம் தங்களது அதிகாரத்தைச் செலுத்தவும், முயன்று வருவதாகவும் பிரசாரங்கள் நடைபெறுவதாகவும் அவர்கள் அபிப்பிராயம் தெரிவித்தார்கள்.

சமஷ்டிக் கொள்கையை ஆதரிக்கும் பல சிங்களத் தலைவர்கள் இருக்கிறார்கள் என்றும் இப்பொழுது என்னால் அறிந்துகொள்ள முடிகிறது. கண்டிப் பகுதியைச் சேர்ந்த சில நண்பர்கள் அகில இலங்கை ரீதியில் ஒரு சமஷ்டிக் கட்சியை ஸ்தாபிக்க விரும்புவதாகவும், அதற்கு முன்னோடியாக தமிழரசுக் கட்சியில் சேரவிரும்புவதாகவும் அவர்கள் என்னிடம் கூறினர்.

இப்பொழுது சிங்கள மக்கள் மத்தியில் நிலவும் பொய் பிரசாரங்களை முறியடிக்க சிங்களத்தில் துண்டுப் பிரசுரங்களை அச்சிட்டு விநியோகம் செய்யவேண்டியது அவசியம் என்றும், அவர்கள் கூறினர். இந்த விஷயத்தை நான் கட்சிக் குழுவின் ஆலோசனைக்கு

ஜெயக்கொடி எம்.பி. தென் இலங்கையில் சிங்கள அரசியல் தலைவர்களின் தலைமையில் இயங்கும் சிங்கள அரசியல்கட்சிகள் வடக்குகிழக்கு மாகாணங்களில் ஊடுருவி, பல பாகங்களிலும் பல கட்சிகளை திறந்து கொண்டிரு

---

# கொலையுண்ட அமைச்சர் வைக்கப்பட்டிருந்த இடம்!

## கனடா பொலிஸார் கண்டு பிடித்தனர்

ஒட்டாவா, அக் 20

கனடா தீவிர தேசியவாதிகளால் கடத்திச்செல்லப்பட்டுக் கொலைசெய்யப்பட்ட குவபெக் ராஜ்ய தொழில் அமைச்சர் வைக்கப்பட்டிருந்த இடத்தைப் பொலிசார் கண்டுபிடித்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது. இது சம்பந்தமாகப் பொலிசார் இருவரைக் கைதுசெய்து விசாரணைக்குட்படுத்தினர்

மொன்றியல் எல்லைக்குச் சமீபத்திலுள்ள மாடிக் கட்டடமொன்றில் ஒரு அறைக்குள் கொலைசெய்யப்பட்ட தொழிலமைச்சர் வைக்கப்பட்டிருந்தாராம்.

குவபெக் ராஜ்யம் முழுவதிலும் துக்கம் அனுஷ்டிக்கப்படுகிறது. ஆயிரக்கணக்கானோர் அமைச்சரின் பூதவுடலுக்கு தமது இறுதி மரியாதையைச் செலுத்தினார்கள். அமைச்சர் லெப்படேயின் பூதவுடல் இன்று சகல ராஜமரியாதையுடனும் அடக்கம் செய்யப்பட்டது.

தொழில் அமைச்சர் கடத்தப்படுவதற்கு முன்னர் ஏற்கனவே தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட பிரிட்டிஷ் ராஜதந்திரி ஜேம்குரொஸ் பற்றிய ஊர்ஜிதமான தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை

பிரிட்டிஷ் ராஜதந்திரி தன் கைப்பட எழுதிய ஒரு கடிதம் அனுப்பியுள்ளாரென்பதையும், தான் உயிருடன் இருப்பதாகவும், உடல்நலத்துடன் இருப்பதாகவும் தெரிவித்துள்ளாரென்பதையும் தவிர அவர் உயிருடன் இருக்கிறார் என்பதற்கு எவ்வித ஆதாரமும் கிடைக்கவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

தீவிர தேசியவாதிகளின் நிபந்தனைக்குத் தொடர்ந்தும் இணங்காதிருந்தால், பிரிட்டிஷ் ராஜதந்திரியும் கொலைசெய்யப்பட்டுவிடுவாரென அஞ்சப்படுகிறது. பிரிட்டிஷ் ராஜதந்திரியின் உயிரைக் காப்பாற்றுவதற்கு கனடா அரசாங்கம் கடும் நடவடிக்கைகளை எடுத்துகள்ளது.

கனடியப் பிரதமர் குவபெக் பிரதமரை சந்தித்து பேசியதாகவும் தகவல் ஒன்று கூறுகிறது.

---

## தாடி வளர்த்தால் சிறையா?

### இளைஞர் கோர்ட்டில் நீதி கோருகிறார்!

வேர்ஜீனியா, அக். 20

அமெரிக்காவில் வேர்ஜினியா மாகாணத்தில் நீண்ட கேசமும் தாடியும் வளர்ப்பது சம்பந்தமாக கோர்ட்டில் ருசிகரமான ஒருவழக்கு எழுந்துள்ளது.

பதினேழு வயதாகும் இளைஞர் நீண்ட கேசமும் தாடியும் வளர்க்கிறார். ஒரு வழக்கில் ஆஜரான அந்த இளைஞருக்கு 'அடுவருக்கத்தக்க' முறையில் கோர்ட்டில் ஆஜரானதற்காக 10நாள்சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்த தண்டனையை எதிர்த்து அப்பீல் செய்துள்ள அந்த இளைஞர் 1861-65 ஆண்டுகளுக்கிடையே உள்நாட்டுச் சண்டை நடந்தபோது ஜெனரலாக இருந்த ராபர்ட்லீயும் 1837-ம் ஆண்டிலிருந்து 1841 ஆண்டு வரை அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த மார்ட்டின் வான் புரூனும் நீண்ட கேசமும் தாடியும் வளர்த்தார்கள். அவர்கள் சிறைத்தண்டனை எதுவும் அதற்காக அனுபவிக்கவில்லை. அப்படியிருக்கையில் எனக்கு மட்டும் ஒரு தனி நீதியா? என்று இந்த இளைஞர் அப்பீல் மனுவில் கேட்டுள்ளார்.

இம்மாதம் 26-ம் திகதி இந்த அப்பீல் விசாரணைக்கு வருகிறது.

---

## 1 320,000 பத்திரிகைகள்!

### இறந்தவர்சேர்த்துவைத்தபொக்கிஷம்

ஜோஹனஸ்பார்க், ஒக் 20

ஜோஹனஸ் பேட்டையில் [illegible]த்து வந்த ஸ்பெக்டர் என்பவர் இறந்ததும் அவருடைய வீட்டிலிருந்து அவர் திரட்டிவைத்திருந்த 1,320,000 பத்திரிகைகளை முனிஸிபல் [illegible] ஏற்றிச் சென்றன.

[illegible] சேர்த்து வைத்தார். பத்திரிகைகள் தொகையாக குவிந்து விட்டமையால் [illegible] வீட்டின் இரு மருங்கிலும் பத்திரிகைகளை அடுக்கி வைத்து, நடுவில் தான் போய் வருவதற்கு மட்டும் வழிவிட்டுவைத்தார். கடைசியில் ஒரு மூலையில் மட்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

---

## தேசிய பகாய் இயக்க போதனை வகுப்புகள்

யாழ்ப்பாணம், புதன்

இலங்கை பகாய் இயக்க புத்தாக்க போதனை வகுப்புகள் இம்மாதம் 21-ம் திகதி முதல் 2 தினங்கள் கொழும்பில் நடைபெறவிருக்கின்றன.

தேசிய பகாய் ஆத்மீக சபையினுல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இவ்வகுப்புகளில் இந்நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பிரதிநிதிகள் கலந்துகொள்வார்கள்,

போதனை வகுப்புகளை நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் நடாத்துவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

வடபகுதி பிரதிநிதிகள் திரு' சி. எம். எஸ். நாதன் தலைமையில் கொழும்பில் நடைபெறவிருக்கும் இப்போதனை வகுப்பில் கலந்துகொள்வதற்காக நாளைசெல்லவிருக்கின்றனர், (குவிம)

---

### ஆசாரியாபிஷேகம்

யாழ்ப்பாணம், புதன்

பிரம்மஸ்ரீ சோ. சண்முகநாத சர்மாவுக்கு ஊரெழு சிவஸ்ரீ ச. சோமசுந்தரக் குருக்களால் புளியங்கூடல் இந்தன் முத்துவிநாயகர் ஆலயத்தில் இன்று ஆசாரியாபிஷேகம் செய்துவைக்கப்படவுள்ளது.

---

## பாடசாலை ஊழியர் அமைச்சருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், செவ்.

"தேசியமயமாக்கப்பட்ட சகல சேவையிலுமுள்ள ஊழியர்களுக்கும் ஆசிரியர், அதிபர்களுக்கும் குறிப்பிட்ட சேவை தேசியமயமாக்கப்பட்ட திகதி வரையில் சிங்கள நிபந்தனையிலிருந்து விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது. ஆனால் பாடசாலை ஊழியர்களுக்குமாத்திரம் விதிவிலக்களிக்கப்படாமை அநீதியானது"

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றை பாடசாலை ஆசிரியர் அல்லாத ஊழியர் சங்கத்தினர் நாளை உதவி கல்வி அமைச்சர் பி. வை. துடாவையிடம் நேரில் சமர்ப்பிக்கவிருக்கின்றனர்.

பாடசாலை ஊழியர்களைப் பாதிக்கும் உத்தியோக மொழி, நிபந்தனைகள் கட்டாய ஓய்வு என்பன பற்றியும் அம்மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

---

## [illegible]. ச. நிலையம்

புத்தூர், செவ்வாய்

கிராமத்தின் வளர்ச்சிக்காக அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் பாடுபடவேண்டும். எமது கிராமம் பின்தங்கிய நிலையிலுள்ளதால் சிரமதானமூலம் வீதிகள், ஒழுங்கைகள், வாய்க்கால்கள் என்பனவற்றை சீர்திருத்தம் செய்யவேண்டும்; வருடாவருடம் விளையாட்டுப்போட்டிகள், குருபூசைகள், போன்றவற்றைத் தொடர்ந்து நடாத்திவருவதால் மக்களுக்கு ஊக்கமளிக்கக்கூடியதாகவிருக்கும்' என மறவன்புலோ - சனசமூக நிலயத்தில் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் நிலையத்தலைவர் திரு. நா. பொன்னம்பலம் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

சங்கத்தின் புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்: தலைவர்: திரு. நா' பொன்னம்பலம், உப தலைவர்: திரு. க. வைத்திலிங்கம், காரியதரிசி: திரு. இ. சோதிலிங்கம், தனாதிகாரி. திரு. செ. பஞ்சலிங்கம்.

ஒன்பதுபேர்கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

---

ரூ. 125 மட்டும் முதலில்

செலுத்தி சுலபமான தவணைமுறையில் ஒரு

பிறதர் தையல் மெஷினையோ

அல்லது

ஸ்டுவர்ட் தையல் மெஷினையோ

பெற்றுக் கொள்ளுங்கள்.

ரொக்கத்திற்கு 10 வீத கழிவு இடைக்கும்.

பிறதர் ஏஜன்ஸீஸ்,

(நல்லூர் கந்தசுவாமி கோவில் தேர்முட்டிமுன்பாக)

பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

சைக்கிள் திருத்துவதில்

யாழ். நகரில்

பிரசித்திபெற்றவர்கள்- முதல்தரமானவர்கள்

உங்கள் சைக்கிளை உதவாதெனக் கழித்துவிடாதீர்கள். எந்த நிலைமையிலான சைக்கிளையும் புதிதே போன்று திருத்திக் கொள்ள எம்மிடம் வாருங்கள்.

அந்தோனிப்பிள்ளை

அன் சன்ஸ்

சிவன்கோவில் மேலே வீதி,

('ஈழநாடு') காரியாலயம் முன்பாக)

யாழ்ப்பாணம்.

உங்கள் தீபாவளி [illegible]

தமிழரசுக்கட்சியின்து கொள்கைகளைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்று தெரிந்துகொண்டேன்.

தமிழரசுக் கட்சியின் கொள்கைக்கு முற்றிலும் மாறான துர்ப்பிரசாரங்களே சிங்கள மக்கள் மத்தியில் நடைபெற்றுக் கொண்டிருப்டிக்க சிங்களத்தில் துண்டுப் பிரசுரங்களை அச்சிட்டு விநியோகம் செய்யவேண்டியது அவசியம் என்றும், அவர்கள் கூறினர். இந்த விஷயத்தை நான் கட்சிக் குழுவின் ஆலோசனைக்கு கொண்டு வருவதற்கு இருக்கிறேன். என்று கூறிய திரு. இலங்கையில் சிங்கள அரசியல் தலைவர்களின் தலைமையில் இயங்கும் சிங்கள அரசியல்கட்சிகள்வடக்குகிழக்கு மாகாணங்களில் ஊடுருவி, பல பாகங்களிலும் பல கட்சிகளை திறந்து கொண்டிருக்கும் இன்றைய நிலையிலே அகில இலங்கை ரீதியில் இயங்க வேண்டும் என்று பல சிங்கள மக்களும் விரும்பும் இலங்கை தமிழரசுக் கட்சி, சமஷ்டிக் கொள்கையை முன்வைத்து அகில இலங்கை ரீதியில் தென் இலங்கையிலும் ஏன் கட்சிக் கிளைகளைத் திறக்கக் கூடாது? என்றார்.

எமது சமஷ்டி கொள்கைகளை இன்னும் அனேக நண்பர்கள் புரிந்து கொண்டால், எமது கட்சியின் கிளைகளை அகில இலங்கை ரீதியில் தென் இலங்கையில் அமைப்பதற்கும் ஆதரவு கிடைக்க முடியுமல்லவா? என்றும் அவர் கூறினர்.

யில் [illegible]த்து வந்த ஸ்பெக்டர் என்பவர் இறந்ததும் அவருடைய வீட்டிலிருந்து அவர் திரட்டிவைத்திருந்த 1,320,000 பத்திரிகைகளை முனிஸிபல் லொறிகள் வரிசையா[illegible] ஏற்றிச் சென்றன.

மேற்படிநபர் பல ஆண்டுகளாக வெகு சிரத்தையோடு இப்பத்திரிகைகளை[illegible]ந்து விட்டமையால் [illegible] வீட்டின் இரு மருங்கிலும் பத்திரிகைகளை அடுக்கி வைத்து, நடுவில் தான் போய் வருவதற்கு மட்டும் வழிவிட்டுவைத்தார். கடைசியில் ஒரு மூலையில் மட்[illegible] தான் இடமிருந்தது: அங்கேயே வாழ்ந்திறந்தார்.

மொழி, நிபந்தனைகள் கட்டாய ஓய்வு என்பன பற்றியும் அம்மஜைரில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சிவன் கோவில் மேலை வீதி,
('ஈழநாடு') காரியாலயம் முன்பாக)
யாழ்ப்பாணம்.

இன்றேவருக! நன்றேகொள்க!!
எதிர்வரும்
தீபாவளி நன்னாளில்
புன்னகை பூக்க - பொன் நகை வேண்டாமா!
தங்க, வைர நகைகள்
வியாபாரத்தில்
முன்னணியில் நிற்கும் சிறந்த
நாணயமுள்ள ஸ்தாபனம்
ராணி ஆபரண மாளிகை
224, கே.கே. எஸ். றேட்; யாழ்ப்பாணம்.
மனேஜர்: A. KARAPUTUGALA.

புத்துணர்ச்சிதரும்
மனோரம்மியமான
குடும்ப டல்க்
ரெமி




Remy®
வர்த்தகவிசாரணைகளுக்கு:-
அவ்ரா அன் கம்பெனி
19, செட்டியார் தெரு
கொழும்பு 11
தொலைபேசி: 27211.

## ஒலிம்பிக் நகரம் தயாராகிறது

மூனிச், அக். 20

ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசில் மூனிச் நகரில் 1972-ம் ஆண்டில் நடைபெறவிருக்கும் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிக்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெறுகின்றன. பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 2500 தொழிலாளர்கள் கட்டுமானவேலையில் சுறுசுறுப்பாக ஈடுபட்டிருக்கிறார்கள். சமீபத்தில், "கூரை எழுப்பும்" வைபவத்தின் போது மூனிச் மேயர் டாக்டர் வோகல் கலந்து கொண்டு, 4 மொழிகளில் தொழிலாளர்களுக்கு நன்றி கூறினர்.

விளையாட்டுத் திடல்கள் அமைக்க இதுவரை 144100 கன மீட்டர் சிமெந்தும், 18850 டன் எஃகும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது 270 லட்சம் மணி நேர உழைப்பும் செலவழிக்கப்பட்டிருக்கிறது. 1972 ல் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் தொடங்கு முன்னர் 12000 பேர்களுக்கான குடியிருப்புகளும் கட்டி முடிக்கப்படும்.

## ப. ச. குளங்கள்

பருத்தித்துறை, செவ்.

நெல்லியடிப் பட்டின சபை தனது எல்லைக்குட்பட்ட பல குளங்களைத் திருத்துவதில் ஈடுபட்டுவருகிறது. சண்டில் குளம், சிறுபான்மைத் தமிழர் பெருமளவு வாழும்பகுதியிலுள்ள கனுவில் குளம் ஆகியவற்றைத் திருத்துவதற்குப் பணம் ஒதுக்கப்பட்டுள்ளது

தென் ஆபிரிக்காவுக்கு ஆயுதம் வழங்குவது

# கேலிக் கூத்து!

## பிரிட்டன் மீது ஸாம்பியா அதிபர் கவுண்டா பாய்ச்சல்

ஐ. நா. (நியூயார்க்) அக், 20

தென் ஆபிரிக்காவுக்கு பிரிட்டன் ஆயுதம் வழங்க முடிவு செய்திருப்பதுகேலிக் கூத்தென்று ஸாம்பியா அதிபர் கென்னத்கவுண்டா ஐ நா. பொதுச்சபையில் கூறினார்.

ஐ. நா. சபையின் 25 ஆண்டு நிறைவு விழாவையொட்டி சிறப்புக் கூட்டம் ஆரம்பமாகியுள்ளது. ஸாம்பியா அதிபர் கவுண்டா உரையாற்றுகையில் பிரிட்டனை வன்மையாகத் தாக்கிப்பேசினார்.

தங்களை அணு ஆயுதமற்ற பிரதேசமாகப் பிரகடனம் செய்யவேண்டுமென்றும் கவுண்டா கோரினார்.

### இந்திரா

ஐ. நா. சபை வெள்ளி விழா சிறப்புக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி நியூயார்க் நோக்கி செல்கிறார் இன்று அதிகாலை விமானத்தில் அவர் புறப்பட்டார். அவருடன் வெளியுறவு மந்திரி திரு. சுவர்ண சிங்கும் மற்றும் சில அதிகாரிகளும் செல்கின்றனர் வழியில் மாஸ்கோவில் மூன்று மணி நேரம் தங்குவார் ரஷ்யப் பிரதமர்திரு. கொஸிஜினுடனும்பேசுவார் வெள்ளிக்கிழமை ஐ. நா. வில் திருமதி இந்திரா உரைநிகழ்த்துவார் ஐ. நா. விலிருந்து திரும்பும் போது இந்திரா கெய்ரோவில் சிறிதுநேரம் தங்குவார்,

### பிரிட்டிஷ் கீத்

பிரிட்டிஷ் பிரதமர் கீத் ஏற்கனவே ஐ நா, வெள்ளிவிழா கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக வந்து சேர்ந்துவிட்டார். இவருடன் மற்றும் சில உலகத்தலைவர்களும்வந்து சேர்ந்துள்ளார்கள்.

## ஓவியத்தில் பட்டம்; இந்தியா பயணம்

உடுப்பிட்டி, செப். 18

ஓவியரான 'தவம்' திரு. வி. சுப்பிரமணியம் புகைப்படக்கலை, லித்தோ ஓவியம் ஆகிய துறைகளில் டிப்ளோமாப்பட்டம் பெறுவதற்காக இந்தியா சென்றுள்ளார்.

கொழும்பு கே. ஜி. இன்டஸ்றீஸ் ஆதரவில் செல்லும் இவரை இன்டஸ்றீஸ் அதிபர் திரு. குணரத்தினம் கட்டுநாயக்கா விமானநிலையத்தில் வழியனுப்பிவைத்தார்: ......

## சீனவுக்கு ரஷ்ய விமானங்கள்?

வாஷிங்டன், அக் 20

மிகவும் வேகமாகச் செல்லக்கூடியதும், தொலை தூரத்துக்குச் செல்லக் கூடியதுமான இல்யூஷின் ரக ஜெட் விமானங்களை சீனவுக்கு விற்பது பற்றி ரஷ்யா பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருப்பதாகத்தெரிய வருகிறது.

இந்த விமான விற்பனையால் மாஸ்கோவிற்கும் பீகிங்கிக்கும் இடையே உறவுமுறை சீர்திருந்தி வருவதைக் காட்டுகின்றன என பிரிட்டனிலுள்ள ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## தீக்கிரையானது

முசலி, செவ்வாய்

மடுறேட்டில் வனபரிபாலன ஊழியர்களின் வீடு ஒன்று தீக்கிரையாகி எரிந்து சாம்பராயிற்று. நாளாந்த சம்பளம் பெறும் இந்த ஊழியர்களுக்குச் சொந்தமான உடைமைகளும் எரிந்து சாம்பராகிவிட்டனவாம். இதுசம்பந்தமாக வவனியா மாவட்ட வனபரிபாலன அதிகாரிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

உங்கள் தீபாவளி ஜவுளிகளை
தெரிவுசெய்ய சிறந்த ஸ்தாபனம்
செ. காசிப்பிள்ளை அன் கோ.,
82, கே. கே. எஸ். றேட் — யாழ்ப்பாணம்:
கிளை: சி கே பி 74/8 பெரியகடை; யாழ்ப்பாணம்.

மலிவு விற்பனை!
தீபாவளி பண்டிகையை முன்னிட்டு
ஏராளமான புது ரக
சாரிகள், சில்க், நைலக்ஸ், சேட்டிங் சூட்டிங் சேட் மற்றும் றெடிமேட்
ஆடைகளும் ஜவுளி வகைகளும் ஏராளமாக தருவித்துஇருக்கிறேம்.
உங்கள் தேவைகளுக்கு முந்துங்கள்.
எல்லா தினுசுகட்கும் விலை குறைக்கப்பட்டிருக்கிறது என்பதையும்
அன்புடன் அறிவித்துக் கொள்கிறேம்.
மு னீ ர் ஸ்
(பிரபல பிடவை வர்த்தகர்கள்)
79,81, கே கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

தீபாவளி மலிவு விற்பனை
ஆரம்பம்: 10—10—1970
உங்கள் பண்டிகைக்கேற்ற ஜவுளித் தினுசுகளையும் சேலைவகைகளையும்
ஏனைய சூட்டிங், சேட்டிங், சேட்டுவகைகளையும் மிகவும் மலிவான
விலைகளில் பெற்றுக் கொள்வதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.
தின்னவேலி சுத்தப்பட்டுச் சாறி ரூபா 215/- தொடக்கம் 265/- வரை
நைலெக்ஸ் பிறின்டெட் சாறி ரூபா 45/- தொடக்கம் 67/- வரை
"சீமா" மணிபுரி சாறி ரூபா 35/- தொடக்கம் 155/- வரை
"சீமா" டெட்றோன் சாறி வ. வி. ரூபா 42/50 ம. வி. 37/50
"சீமா" நைலோன் சாறி வ. வி. ரூபா 41/50 ம. வி. 36/50
சாறிஎம்போறியம்
வடமாகாண ஏகவிநியோகஸ்தர்: "சீமா சாறீஸ்"
124, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 418

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

கடமைகளைச் செய்வதற்குப் பலன்களை எதிர்பார்த்தல் கூடாது. ஆனால் நல்ல காரியம் எதுவும் முடிவில் பயனளித்தே தீரும் என்பது என் உறுதியான நம்பிக்கை.

— மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna
Post Box: 49, Jaffna: Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஐப்பசி மாதம் 4-ந் திகதி (21 - 10 - 70)


## மூன்று புதிய பல்கலைக்கழகங்கள்

வடக்கு, கிழக்கு, தெற்கு இம்மூன்று பகுதிகளுக்கும் மூன்று பல்கலைக்கழகங்களை ஏற்படுத்துவதென்று அமைச்சரவை தீர்மானித்து, தங்கள் தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்ற முன்வந்துள்ளது பெரிதும் வரவேற்கத்தக்கதாகும். பல்கலைக்கழக அமைப்பைப் பற்றி தமிழ்த் தலைவர்களுக்குள்ளாகவே பெரும் வேற்றுமைகள் இருந்தன. ஒரு கட்சியினர் வடக்கில் வேண்டுமென்றும் மற்றொரு கட்சியினர் கிழக்கில் வேண்டுமென்றும் வற்புறுத்தினர். பூனைகள் தகராறில் குரங்கு மத்தியஸ்தம் செய்த கதைபோல இரண்டு இடத்திலும் இல்லாமற்போகுமோ என்று அஞ்சக்கூடிய நிலை ஏற்பட்டது. அந் நிலையில் கூட்டுமுன்னணிக் கட்சியினர் வடக்கு கிழக்கு மட்டுமன்றி, தெற்கிலும் ஒரு பல்கலைக்கழகத்தை அமைப்பதாக அரசியல் ஞானத்துடன் தேர்தலுக்கு முன் அறிவித்து அதை இப்போது நிறைவேற்ற முன்வந்திருக்கிறார்கள். இரு தமிழ் அரசியல் கட்சிகளும் கேட்க முன்வராதிருந்தும் வடக்குக்கும் கிழக்குக்கும் இரு பல்கலைக்கழகங்களை ஏற்படுத்த இந்த அரசாங்கம் முன்வந்தது சிறப்பாக தமிழ்ப் பொதுமக்களால் நன்றியுடனும் மகிழ்ச்சியுடனும் வரவேற்கப்படும். இவ்விதமான அரசியல் ஞானத்தை வேறு எந்தக்கட்சியும் காட்டவில்லை இதேபோல் மற்ற முக்கிய விஷயங்களிலும் இந்த அரசாங்கம் விரிந்த மனப்பான்மையைக் காட்டினால், நாட்டிலே வகுப்புவாதங்கள் குறைந்து, தேசிய ஒற்றுமை பலப்பட்டு நாடு முன்னேற வழிபிறக்கும்.

இலவசக்கல்விமுறை ஏற்பட்டதும், பல்கலைக்கழகத் ...

பல்கலைக் கழக கல்வி கற்க போதிய வாய்ப்புகள் அளிக்கப்படவேண்டும். இது அரசாங்கத்தின் முக்கிய கடமை. ஆனால் பட்டதாரிகளுக்கெல்லாம் வேலை அளிக்கவேண்டுமென்பது வேறு விஷயம். வேலைக்கு அரசாங்கத்தை நம்பிப் பயனில்லை என்ற உண்மையை அதிகமானவர்கள் உணர்ந்து தாங்களே சுயமுயற்சியால் தங்களுக்கேற்ற தொழிலைத் தேடிக்கொள்ளவேண்டுமென்ற நிலை ஏற்பட்டு வருகின்றது. படிக்கும் படிப்பு அறிவை வளர்த்து மனதை விரிவாக்கவும் பண்படுத்தவும் உதவிபுரியும்: பணம் சம்பாதிப்பதற்காகத் தன் படிப்பு என்ற மனப்பான்மை தவறு. ஒன்றும் படிக்காதவர்கள் லட்சம் லட்சமாக சம்பாதிப்பதைப் பார்க்கிறோம். ஆகவே பல்கலைக்கழகக் கல்வியை தகுதியானவர்களுக்கெல்லாம் அளிக்க, இப்போது மூன்று புதிய சர்வகலாசாலைகளை அமைக்க அரசாங்கம் முன்வந்தது போற்றத்தக்கது. இதனால் தீமையைவிட நன்மையே அதிகமாக இருக்கும். பணமில்லை என்ற காரணம் கூறாமல், இத் தீர்மானத்தை கூடிய சீக்கிரத்தில் நடைமுறைக்குக் கொண்டுவர அரசாங்கம் எல்லா முயற்சிகளும் செய்யவேண்டும். பொதுமக்களின் உதவியும் ஒத்துழைப்பும் இதற்கு அமோகமாகக் கிடைக்குமென்று எதிர்பார்ப்பது மிகையல்ல.

## அகில இலங்கை இந்து கலாசார நிலையம்

அகில இலங்கை இந்து கலாசார நிலையத்தின் புதுக் கட்டிடத்துக்கான அடிக்கல் நாட்டு விழா ...

லாதது பெரிய குறையாகும். இந்துத் தலைவர்கள் எடுத்த முயற்சியின் மீது கொழும்பிலே ஒரு ...

## மன்னார் தேர்தல் ஆட்சேப வழக்கு

# “ரஹீமின் வேலைக்காரர் என்னை வீட்டிற்கு வரும்படி கூறினர்”

## மஜித் மௌலவி சாட்சியம்

யாழ்ப்பாணம், செவ். மனுதாரரான றகீமை ஜூன் 10-ம் தேதிக்கு பின் சந்தித்தேன். அவர் வீட்டிற்கு போனேன். வேதம் ஓதுவதற்கு சென்றேன். ரஹீமின் வேலைக்காரர் என்னை வரும்படி கூறினர். பிள்ளைக்கு சுகமில்லையென்றும், வேதம் ஓதுவதற்கு வரும்படியும் சொன்னார். வழமையாக வீட்டிலுள்ள பெண்கள் சொல்லி விடுவார்கள். நான் போய் வேதம் ஓதுவதுண்டு. எல்லாவீடுகளுக்கும் நான் வேதம் ஓதுவதற்கு செல்வதுண்டு.

மன்னார் தேர்தல் ஆட்சேப வழக்கில் எதிர்மனுதார் சார்பில் ஆஜரான அட்வகேட் எம். திருச்செல்வம், குறுக்கு விசாரணை செய்கையில் சாட்சியமளித்த மஜித்மௌலவி மேற்கண்டவாறு கூறினார்.

மஜித் மௌலவி தொடர்ந்து கூறியதாவது: உலகம் முழுவதும் வெள்ளிக்கிழமையில் முஸ்லீம்களின் ஜும்மா தொழுகை இருக்கிறது. எல்லோடும் ஒன்றாக சேர்ந்து செய்யும் தொழுகை அது. கொத்துபா என்பது மார்க்க அறிவுரை. ஜும்மா தொழுகை மத்தியான்த்திற்குப் பிறகு ரம்சான்தொழுகையும் ஹஜ் தொழுகையும் எல்லாரும் சேர்ந்திருந்து செய்யும் தொழுகை, ஒவ்வொரு பள்ளிவாசலிலும் மௌஅசின் இருக்கிறார். பள்ளிவாசலில் அவர் ஒரு பணியாள். அவரை பரிபாலகர் நியமித்து சம்பளமும் வழங்குவார். இலங்கையில் முஸ்லீம்களின் தொழுகை பற்றி அட்டவணை முஸ்லீம் வீடுகளிலும், பள்ளிகளிலும் இருக்கும்.

வழ: இந்த வருடம் மே 15-ம் திகதி அட்டவணைப்படி ஜும்மா தொழுகை 12-20 ஆரம்பமாகியது?ஆம்

வழ: மே மாதம் 11-ம் திகதி முதல் 17-ம் திகதி வரை மத்தியான தொழுகை 12-20 மணிக்கு ஆரம்பமாகும்?-ஆம்.

வழ: மே 15-ம் திகதி ஜிம்மா தொழுகை 12-20 மணிக்கு ஆரம்பமானது? சரி

வழ: 12-20 மணிக்கு மௌஅசின் அழைப்பு விடுவார்கள், சில பள்ளிவாசலில் 12 மணிக்கும் அழைப்பார்கள்.

வழ: அழைப்பு கேட்டதும் முஸ்லிம்கள் பள்ளிக்கு செல்வார்கள்?-ஆம்.

வழ: தனித்தனியாக தொழுவதை சுன்னத்து என்பார்கள்?-ஆம்

வழ: ஜிம்மா தொழுகையை அனுஷ்டிக்காத முஸ்லீம்கள் தவறு செய்தவர்கள் எனக் கருதப்படுவார்கள்?-ஆம்.

வழ: ஜிம்மா தொழுகை ‘அமென்’ எனக் கூறியதும் முடிவடையும்?-ஆம்.

வழ: ஜிம்மா தொழுகை நடக்கும் நாட்களில் கதீஸ் சொல்லலாம் அல்லது சொல்லாமல் விடலாம்?-ஆம்

வழ: பள்ளிக்கு வெளியிலும் கதீஸ் சொல்ல முடியும்?-ஆம்.

வழ: அநேகமாக பாடசாலையிலும் கதீஸ் சொல்லப்படுவதுண்டு?- பெண்களுக்கா பாடசாலையில் சொல்லப்படும்.

வழ: கலியாண வீடுகளிலும் கதீஸ் சொல்லுவார்? -எனக்கு தெரியாது.

நீதி: வெளியிலும் கதீஸ் அன்று சொல்லியிருக்கலாம்? அதிகமாக வெள்ளிக்கிழமையில் பள்ளிவாசலுக்குள் தான் செல்வார்கள்.

நீதி: பள்ளிக்கு வெளியில் கதீஸ் சொல்வதற்கு தடையில்லை?-இல்லை.

வழ: நீர் ஒரு கொந்தருத்துகாரர் என்றீர்?-ஆம்.

வழ: மே 20-ம் திகதி அக்கரைப்பற்றுக்குசென்றீர்? ஆம் ...

...ன்றில் எழுதிக் கொடுத்து விட்டுச்சென்றேன்.

வழ: விபரத்தை ஏன் நேற்று சொல்லவில்லை?- விபரமாக சொன்னால் கோபிப்பீர்கள் என்று.

வழ: யோசித்துப் பொய் சாட்சியம் சொல்லுகிறீர்?- நடந்ததைச் சொல்லுகிறேன்.

வழ: சுல்தான் பணம்வசூலித்தது பற்றி கடிதம் போட்டாரா?- ஆம் முழுவதும் வசூல் செய்யவில்லையென்று எழுதினார்.

வழ: ஒருதடவை எழுதினார்?: இரண்டுமூன்றுதடவை

வழ: மன்னாரிலிருந்து செல்லும்போது வருமதி எவ்வளவு?- 1800 ரூபாவுக்கு மேல்.

வழ: திரும்பிவந்ததும்சுல்தானிடமிருந்து 150 ரூபா பெற்றுக் கொண்டீர்,. ஆம்

வழ: வேறு ஆட்களிமிடருந்து பெற்றுக் கொண்டீரா? பொற்கேணி. முசலி, பகுதிகளில் சிறுதொகைகள் பெற்றுக் கொண்டேன்.

வழ: எவ்வளவு?- கணக்கு வைக்கவில்லை.

வழ: பையில் குறிக்கவில்லை?-வரவுவைத்தேன்.

வழ: சுல்தானின் கடுதாசியில் வரவுவைக்கவில்லையா?- அவரே வைத்திருந்தார். காசு தரும்போது துண்டையும் தந்தார்.

நீதி: எப்போது? மே மாதத்தில்

நீதி: பிறகும் சுல்தானிடம் விபரம் இருந்ததா?- மே 20ம் தேதி குறித்துக் கொடுத்தேன்.

நீதி. மே 20ல் மன்னாரை விட்டுப் போனீர்?-ஆம்

வழ: பின் எப்போது மன்னாருக்கு வந்தீர்? ஜூன்10ம் தேதி

வழ: தேர்தலு... ப ...

வழ: மன்னாரில் தங்கியிருக்க வந்தீர்?- மன்னாரில் தொழில் செய்யலாம் என்று வந்தேன்

வழ; ஊதுபத்தி வியாபாரம்?-ஆம்

வழ: அதன்பின் மன்னாரில் தொடர்ந்து இருந்துவருகிறீ ?- இடையில் ஒருதடவை போனேன்.

வழ: மனைவி பிள்ளைகள் அக்கரைப்பற்றில் தான்?- ஆம்

வழ: மன்னாரில் வந்து இருக்க ஏன் தீர்மானித்தீர்? நான் இருந்த இடத்தில் வியாபாரததிற்கு வசதியில்லை மன்னாரிலிருந்து ஊதுபத்தி உற்பத்தி செய்தால். அக்கரைப்பற்றுக்கு கொண்டு போகலாம் என நினைத்தேன். அக்கரைப்பற்றில் பிள்ளைகளின் படிப்பு மோசமாயிருக்கிறது பிள்ளைகளை எதிர்வரும் ஜனவரியில் மன்னாருக்கு கூட்டி வரலாம் என நினைத்தேன்

வழ: மன்னாரில் உமக்கு சொந்த இடமில்லை? ஆம் ஆனால் வாடகைக்குக்கிடைக்கும்.

நீதி: பள்ளிவாசலில் கடமையாற்றும் போது ஒரு இடத்தில் இருந்தீர்? ஆம்

நீதி: பள்ளியை விட்டுப் போனது எப்போது? 70ம் ஆண்டு

நீதி: அதன்பின் தொழிலுக்காக மன்னார் வந்து போனீர்?-ஆம்

நீதி: ஜூன் மாதம் மன்னாருக்கு வந்தீர் நிரந்தரமாக இருக்க? ஆம்

நீதி; ஜனவரியில் குடும்பத்தை மன்னாருக்கு கொண்டுவர நினைத்தீர்?- குடும்பத்தை இல்லை பிள்ளைகளை மட்டும்

வழ; உமது தொழிலை விஸ்தரிக்கலாம் எனஎதிர்பார்க்கிறீர்? ஆம்

வழ: மட்டக்களப்பில் பதிவு செய்த கொந்தராத்து காரராக இருந்தும் 3 ஏக்கர் நிலம் இருந்தும் வீடு இருந்தும் இங்குவந்தீர்?-ஆம்

வழ: மன்னாரில் உமக்கு வீடுஇல்லை? ஆம்

நீதி: ஊதுபத்திக்கு நீர் லேபல் செய்ய வில்லை?- ...

# ஜெயராமன் எழுதுவது

சில வருடங்களுக்கு முன்பாக சேர். கந்தையா வைத்தியநாதன் தலைமையில் கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் அகில இலங்கை இந்து காங்கிரஸ் (இந்துமா மன்றம்) ஸ்தாபிக்கப்பட்ட போது, பெயர் விஷயமாக கருத்து வேற்றுமை ஏற்பட்டது. தீவின்பல பகுதிகளிலிருந்து சைவ, ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் பலர் அதில் கலந்து கொண்டார்கள். அகில இலங்கை சைவ மாமன்றம் என்று பெயர் வைக்க வேண்டுமென்றனர் சிலர் இந்து காங்கிரஸ் (இந்து மாமன்றம்) என்றே பெயர்வைக்க வேண்டுமென்றனர் மற்றொருசாரார் முடிவில் அகில இலங்கை இந்து காங்கிரஸ் அல்லது இந்து மாமன்றம் என்றே பெயர் வைக்கப்பட்டது. அந்தப் பெயர் வைத்தால்எவ்வளவு நன்மை என்பதை சென்ற திங்களன்று தான் நேரில் கண்டேன்:

கொழும்புகோட்டையிலே பார்சன்ஸ் ரோடு எனும் சேர். சிற்றம்பலம் காடினர் மாவத்தையிலே திங்களன்று காலை 10 மணிக்கு இந்து மாமன்ற கலாசாரநிலையத்துக்கான அடிக்கல் நாட்டு விழாவைபவம் வெற்றிகரமாக நடைபெற்றது. 11மச்சுடன் கூடிய அக்கட்டடத்துக்கு பல லட்ச ரூபாய்கள் ஆகும். முதலில் இரண்டரை லட்சத்துக்கான ஒரு கட்டடத்தை அமைத்து அதற்கு மேல் பணம் சேரச்சேர. நிலையத்தை மேலே மேலே கட்டிக்கொண்டு போகலாமென்பது திட்டம்,

0 0

முதல் நாளன்றே சுமார் லட்சம் சேர்ந்துவிட்டதாம். ஒருவர்த்தக அன்பர் 15 ஆயிரத்துக்கான ‘செக்’ கொடுத்தார் மற்றோர் தமிழ் அன்பர் பத்தாயிரம் ரூபாய் அளித்தார். கொடுக்கும் கைகள் வாழ்க! தீவின் பல பகுதிகளிலிருந்தும் மண் ஆடரில் பணம் இதற்கு வந்து கொண்டே இருக்கிறதாம். மட்டக்களப்பு சைவ மகாசபை பிரதிநிதிகள் நேரில் வந்திருந்து, இந்தப்பணிக்குத்தாங்கள் பணம் வசூலித்து அனுப்புவதாக தெரிவித்தனர். ஹிந்திவகுப்பைச் சேர்ந்த வட இந்தியவர்த்தக ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஓர் அன்பர் 5001 ரூபாய் அளித்த...

சமயத்தில் பற்று அதிகமுள்ளவர்கள் அச்சமூகத்தைச் சேர்ந்தவர்களிடம் இக்கட்டடத்துக்கு உதவிசெய்வதுடன், இந்த ஸ்தாபனத்தில் சேர்ந்து ஆதரவளிப்பதாயின் இலங்கையின் தலைநகரிலே இந்து சமூகம் புதுப்பலமும் மதிப்பும் பெறுவதாக இருக்கும். 0 0

இந்து சமூகம் இந்நாட்டிலே இரண்டாவது பெரிய சமூகமாக இருப்பினும் அவர்கள் பல சாதிகளாகவும், மொழியினராகவும், சைவர், வைணவர், யாழ்ப்பாணத்தவர், மட்டக்களப்பினர், மலைநாட்டினர், கருவாக்காட்டார். வடஇந்தியர், மலையாளத்தார் என்று பலபல பிரிவுகளாகப்பிரிந்து வாழ்வதால் அவர்கள் பலமும் மதிப்பும் செல்வாக்கும் மிகக்குறைவாகும். இவர்கள் எல்லாம் இந்து மாமன்ற மூலம் ஒன்று சேருவதாயின், தலைநகரில் மட்டுமன்றி, இந்நாட்டிலேயே இந்து சமூகத்துக்குப் புதுப்பெருமையும் பலமும் ஏற்படுவதாக இருக்கும்.

பத்துலட்ச ரூபாய் செலவில் சீக்கிரத்தில் இப்புதிய கட்டிடத்தைக்கட்டி முடிப்பது பெரிய காரியமன்று. புதிய கலாசார ஸ்தாபனம் கட்டி முடிந்ததும், பல பல கலாசார நிகழ்ச்சிகளும் அதில் இடம்பெறலாம் இந்துக்கள் அல்லாதவர்களையும் அழைத்து அவர்களுடன் நல்லுறவு கொள்ளலாம். மற்றவர்களுக்கு வழிகாட்டும்படியாக பல நல்ல காரியங்களில் ஈடுபடலாம் எந்தக்காரியமும் வெற்றிபெறவேண்டுமாயின் இடம், பொருள், ஏவல் மூன்றும் அவசியம். மூன்றிலும் இடமே மிகமுக்கியமானது. அந்தப் பெரிய குறையை நீக்குவதற்கான முயற்சி வெற்றிகரமாக நடைபெறுவதைக்கண்டேன் பல பிரமுகர்கள் அதில் உற்சாகத்துடன் ஈடுபட்டுள்ளனர் திருவருள் துணை இருப்பதற்கான பல அத்தாட்சிகளைக் காணக்கூடியதாக உள்ளது. திருவருள் கூட்டினால் எதுதான் நடவாது?

இந்து சமூகத்தில் பலபல விதமான கலாசாரங்கள் உண்டு. அதில் தலைசிறந்தது சைவ கலாசாரமே. சைவர்களே அதை மெதுவாக மறந்து வருகிறார்கள். இது துரதிருஷ்டம். சைவராகப் பிற...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனப்பான்மையைக் காட்டினுல், நாட்டிலே வகுப்பு வாதங்கள் குறைந்து, தேசிய ஒற்றுமை பலப்பட்டு நாடு முன்னேற வழிபிறக்கும்.

இலவசக்கல்விமுறை ஏற்பட்டதும், பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி கற்க முன்வருபவர் எண்ணிக்கை பன்மடங்கு அதிகரித்தது. பேராதனையில் ஒன்றும், கொழும்பில் மூன்றுமாக, நான்கு பல்கலைக்கழகங்களிலும் தகுதிபெற்ற மாணவர்களில் சுமார் ஐயாயிரம் பேருக்குமேல் சேர்த்துக் கொள்ள இடமில்லை, உயர் கல்வி கற்க கல்வித் திறமை இருந்தும், இடமில்லை என்ற காரணத்தால் ஆயிரக்கணக்கானவர்களுக்கு பல்கலைக்கழகக் கல்வியை அளிக்க மறுப்பது அவர்களுக்குச் செய்யும் பெரும் பாவம். இன்னும் மூன்று அல்ல, இன்னும் அதிகமான பல்கலைக்கழகங்களை தேவைக்கேற்ப அதிகரிக்கவேண்டிய அவசியம் உண்டு. வடக்கில் இருந்து ஏராளமான தமிழ் மாணவ மாணவிகள், அப்பகுதியில் பல்கலைக்கழகம் ஏதுமில்லாததால் பெற்றேர்களைப் பிரிந்து அதிக செலவு செய்து கொண்டு, கண்டி, கொழும்பு முதலிய இடங்களுக்கு வந்து பத்திரமாகக் குடியிருக்கவும் சாப்பிடவும் நல்ல இடமின்றி பெரும் அவதிக்கு உட்படுகின்றனர். ஏழைகளாயின் அவர்கள் இடம்பெற்றும் செலவுசெய்ய முடியாமல், தொடர்ந்து படிக்கமுடிவதில்லை. கல்வியை மட்டும் இலவசமாக்கினுல், எளிய மாணவர்கள் சாப்பாட்டுச்கும் குடியிருப்பதற்கும் செலவழிக்க என்ன செய்வது? பல்கலைக்கழகக் கல்வி, வடக்கு கிழக்கில் வசிக்கும் எளிய தமிழ் மாணவர்களுக்குக் கிடைக்கமுடியாமல் மறைமுகமாக மறுக்கப்பட்டு வந்தது. இப்போது அவ்விரு பகுதிகளிலும் புதிதாக இரு பல்கலைக்கழகங்களை ஆரம்பிப்பதாயின், இந்தச் சங்கடம் எளிய தமிழ் மாணவர்களுக்குப் பெரிதும் தீரும்.

ஏற்கனவே நாட்டில் வேலையில்லாப் பட்டதாரிகளின் எண்ணிக்கை ஆயிரக்கணக்கில் உயர்ந்துபோவதாகவும், இனியும் அதிக பல்கலைக்கழகங்களைத் திறப்பதாயின், வேலையில்லாத பட்டதாரிகளின் பட்டாளம் சமாளிக்கமுடியாமல் அதிகரித்து பலாத்கார புரட்சி இயக்கங்கள் பெருகுமென்று சிலர் வாதிக்கலாம். தகுதியுள்ளவர்களெல்லாருக்கும்

## அகில இலங்கை இந்து கலாசார நிலயம்

அகில இலங்கை இந்து கலாசார நிலயத்தின் புதுக் கட்டிடத்துக்கான அடிக்கல் நாட்டு விழா தலைநகரான கொழும்பில் நடைபெற்றது இதை இந்நாட்டின் சரித்திரத்திலும், சிறப்பாக இங்கு இரண்டாவது பெரிய சமூகமாக வாழும் இந்துக்களின் சரித்திரத்திலும் ஒரு மிக முக்கியமான நிகழ்ச்சி என்றே கூற வேண்டும்.

இந்து மன்னர்கள் இங்கு செங்கோல் ஓச்சிய காலத்திலே இந்து நாகரிகமும் கலாசாரமும் சிறப்புற்றோங்கின. அந்நியர்களின் படையெடுப்பால் இந்து மன்னர்கள் மறைந்து அதன் பயனுக இந்துக் கலாசாரமும், சமூகமும் தாழ்வுற்றது. இந்து கோவில்கள் இடிக்கப்பட்டன. இந்து கலாசார பழக்கவழக்கங்கள் பெரிதும் மாறின. ஒரு சமயம், வாழை இலையில் சாப்பிடுவதும் கூட தடுக்கப்பட்டிருந்ததாம். கொடுங்கோல் ஆட்சி நடந்த காலத்திலும் இந்து சமூகப் பெரியார்கள் அவ்வப்போது வழிகாட்டி இந்து சமூகம் சிதையாதபடி பாதுகாத்து வந்தனர். நாடு விடுதலை பெற்ற பின் இந்து சமூகம் இந்நாட்டிலே மீண்டும் மெதுவாகத் தலை தூக்குகின்றது. இடிந்த கோவில்களும் கோபுரங்களும் மீண்டும் கட்டப்பட்டு வருகின்றன. நாடெங்கிலுமுள்ள இந்து ஸ்தாபனங்கள் பலவும் சேர்ந்து அமைத்துள்ள அகில இலங்கை இந்து மாமன்றம் இங்கு இந்து சமூகத்தின் வாய் போல் இருந்து அரும்பணிகளைச் செய்ய முன்வந்துள்ளது. இந்து சமூகத்திலுள்ள சிறந்த தலைவர்கள் இதில் அங்கம் வகித்து இந்நாட்டிலுள்ள இந்து சமூகத்தவரின் மேலான பிரதிநிதி ஸ்தாபனமாக இதைப் பொலியச்செய்ய முயற்சிக்கின்றனர்.

தலைநகரிலே பௌத்தர்கள், கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் இவர்களுக்கெல்லாம் பெரிய கலாசார நிலயங்கள் அமைக்கப்பெற்று அவை நல்ல தொண்டாற்றி வருகையில் இந்து கலாசார நிலயம் ஒன்றில்லாதது பெரிய குறையாகும். இந்துத் தலைவர்கள் எடுத்த முயற்சியின் மீது கொழும்பிலே ஒரு மத்திய ஸ்தானத்தில் பெறுமதியான காணி அரசாங்கத்தால் கிடைத்தது. அந்த இடத்தில் இந்து கலாசார நிலயத்தை நல்ல முறையில் அமைக்கவே நேற்று அங்கு அத்திவாரக்கல் நாட்டப்பெற்றுள்ளது. இந்த நாட்டில் இரண்டாவது பெரிய சமூகமும் மிகத் தொன்மை வாய்ந்ததுமான இந்து சமூகத்தின் மதிப்புக்கேற்ப, இந்தப் புதிய நிலயம் அமையவேண்டுமென்பதை விளக்கத் தேவையில்லை. இந்துசமயத்தைப் பற்றியும், சமூகத்தைக் குறித்தும் தவறுன பிரச்சாரங்கள் உலகில் நடந்து வந்துள்ளன. அரசியல் அதிகாரமோ, கட்டுப்பாடோ, ஒற்றுமையோ இல்லாத நிலையில் இந்துக்களில் பலருக்குமே தங்கள் கலாசாரத்தின் மாண்பும் மகிமையும் சரிவரத் தெரியாது. ஆகவே புதிய கலாசாரநிலயம் இந்து கலாசாரத்தின் மாண்பினைப் பொலியும்படி செய்யவும், தப்பெண்ணங்களை நீக்கவும் இந்துக்கள் இந்துக்களாக வாழவும் செய்யவேண்டிய பணி அதிகமுண்டு.

இப்புதியக் கட்டிடத்தில் பூசை அறை, வாசகசாலை, புத்தகசாலை, பிரசங்க மண்டபம் முதலியன அமைக்கப்படுவதுடன் தலைநகருக்கு வரும் இந்துப் பெரியார்கள் இந்து சூழ்நிலையில் வசதியாகத் தங்கியிருக்கவும் ஏற்பாடு செய்யப்படுமென்று தெரிகிறது. தலைநகரில் இவ்விதமான ஒரு ஸ்தாபனம் நல்ல முறையில் இருக்கவேண்டியது எவ்வளவு அவசியமென்பதை விளக்கத் தேவையில்லை. நாட்டிலுள்ள இந்துக்கள் இதற்கான பொருள் உதவியை தாராளமாகச் செய்து இந்த நிலயத்தை மேலாக அமைப்பதன் மூலம் தங்கள் சமூகத்தின் மதிப்பையே உயர்த்திக்கொண்டு தங்களுக்குத் தாங்களே நன்மை செய்து கொள்பவராவர். இவ்வித கலாசார ஸ்தாபனத்துக்கு அரசாங்கமும் தாராளமாக உதவிகளைச் செய்வதன் மூலம் இந்துக்களின் அபிமானத்தையும் அது பெற முடிவதாக இருக்கும். இந்த நிலயம் சீக்கிரத்தில் கட்டப்பட்டு தலைநகரின் அழகையும் மதிப்பையும், பணியையும் உயர்த்துமென்றே நம்புகிறோம்.

இதே சமயத்தில் தலைநகரிலே விவேகானந்த சபைக்கான கட்டிடத்துக்கும் கொழும்புத் தமிழ்ச் சங்கக் கட்டிடத்துக்கும் சமீபத்தில் அடிக்கல்கள் நாட்டப்பெற்றுள்ளன. வளர்ந்து வரும் சமுதாயத்தில் இவ்வித நல்ல ஸ்தாபனங்களும் வளர்ந்து சமூகத்துக்கும் நாட்டுக்கும் ஆற்றவேண்டிய பணிகள் கொஞ்சமல்ல. ஒரு சமூகத்துக்குக் கோவில்களை விட இக்காலத்தில் இவ்வித ஸ்தாபனங்களே அதிக பயனுள்ளவை என்று மேல்நாட்டு அறிஞர் ஒருவர் கூறுகின்றுர். தலைநகரான கொழும்பில் இவ்விதமான ஸ்தாபனங்களுக்குப் பொருளுதவி செய்து அவற்றை இந்துக்களும், தமிழர்களும் கட்டி எழுப்பி நல்ல பணிகளைச் செய்வதன் மூலம் சமூக ஒற்றுமையைப் பலப்படுத்தி பிறரது நன்மதிப்பையும் பெற்று நாட்டுக்கு நற்பணிகளைச் செய்யவும் தங்கள் எதிர்கால சந்ததியினர் சிறப்புற்று வாழவும் வழி செய்வதாகும்.

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 53-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21-ம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

தான் செல்வார்கள்.

வழ: பள்ளிக்கு வெளியில் கதீஸ் சொல்வதற்கு தடையில்லை?-இல்லை.

வழ: நீர் ஒரு கொந்தருத்துகாரர் என்றீர்?-ஆம்.

வழ: மே 20-ம் திகதி அக்கரைப்பற்றுக்குசென்றீர்? ஆம்

வழ: தாராக்குண்டு பள்ளிவாசலில் நடந்தது பற்றி ரஹீமுக்கு சொல்லவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படவில்லை?-இல்லை.

வழ: மே 15-ம் திகதி தாராக்குண்டுக்கு வியாபார விஷயமாகச் சென்றீர்? -கதீஸ் செய்வதற்காகவும் சென்றேன்.

வழ: மன்னுரிலிருந்து புறப்படும் போது அன்று கதீஸ் செய்ய வேண்டுமென முடிவு செய்தீர்?-ஆம்

வழ: மே 3-ம் திகதி மன்னுருக்கு வந்தபின் முதல் தடவையாக தாராக்குண்டுக்கு மே 15-ம் திகதி சென்றீரா?-ஆம்.

வழ: கணக்குப் புத்தகம் ஏதாவது வைத்திருக்கிறீரா?-பைல் ஒன்று வைத்திருக்கிறேன்.

வழ: நேற்றுநீர் பைல் பற்றி சொல்லவில்லை?- துண்டுகள் என்று சொன்னேன்

நீதி: வருமதி பற்றி உமக்குத் தெரியும்?-ஆம்

நீதி: சுல்தான் விபரங்கள் வைத்திருந்தாரா?- நான் போகும் போது துண்டொ

மே 20ம் தேதி குறித்துக் கொடுத்தேன்.

நீதி. மே 20ல் மன்னுரை விட்டுப் போனீர்?-ஆம்

வழ: பின் எப்போது மன்னுருக்கு வந்தீர்? ஜுன் 10ம் தேதி

வழ: தேர்தலு[...]தப் பின்பு? ஆம்,

# இன்றைய பலன்.

ஐப்பசி மாதம் 4-ம் திகதி

(21-10-70)

மேஷம்: தொழில் புரியும் இடத்தில் சக ஊழியர்களின் ஆதரவைப் பெறுவீர்கள் அதிர்ஷ்டகரமானதினம்

ரிஷபம்: துன்பத்தின் சாயல் மனதிலேபடியும் புனைந்துரைகளால் மனது புண்படும். முன் எச்சரிக்கை நன்று.

மிதுனம்: பிரயாணத்தில் பொருள் நழுவக்கூடும் திருட்டர்பயத்துக்கும் இடமுண்டு பொறுமையைப் பேணவும்,

கடகம்: போதுமென்ற மனத்துடன் இருப்பீர்கள் எதிலும் நிறைவுதென்படும். குடும்பத்திலும் அன்புதவழும்,

சிம்மம்: சீறிவரும்கோபம் பெரிய மோதல்களை ஏற்படுத்தும். எதிரிகளின் சூழ்ச்சிகள் பலமாக இருக்கும் பொறுமை நன்று.

கன்னி: கொள்வனவுகளில் நல்லதிருப்பம் ஏற்படும், வணிகர்களுக்கு வியாபார விருத்தியுண்டு இன்று சிறப்பான நாள்.

துலாம்: மக்களால் மகிழ்ச்சிமனம் நிறைய வாழ்வுயுதுமையில் நாட்டம் புதுப் பொலிவும் உண்டு.

விருட்சிகம்: இடர்கள் பல தாக்கும் இதயத்தில் எரிமலைகுமுறும் உதவி செய்யப் போய் உபத்திவத்தை அணைத்துக்கொள்ளநேரிடும்.

தனுசு: குடும்பவழியால் மனதுக்கு நிம்மதி பிறக்கும் நீண்டநாள் பூமிப்பிணக்கு சமரசமாக முடிவடையும் சிறப்பானதினம்.

மகரம்: அரசபயத்துக்கு இடம் உண்டு. வழக்கு விவகாரத்தில் மாட்டிக்கொள்ளவேண்டும் மகிழ்ச்சியானதினம்.

கும்பம்: புதிய பொருட்களை கொள்வனவு செய்வதற்கு இன்று நலம் மாணவர்களாயின் கல்வியில் அதிக ஆர்வம் பிறக்கும்.

மீனம்: கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும். எதையும் துரிதமாகச் செவய்தில் வெற்றிகாண்பீர்கள் தெய்வத்தின் துணையும் உண்டு.

சோதிடக் கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

து காரராக இருந்தும் 3 ஏக்கர் நிலம் இருந்தும் வீடு இருந்தும் இங்குவந்தீர்?-ஆம்

வழ: மன்னுரில் உமக்கு வீடுஇல்லை? ஆம்

நீதி: ஊதுபத்திக்கு நீர் லேபல் செய்ய வில்லை?-ஆம்

நீதி: ஒரு காலத்தில் லேபல் வைத்திருந் தீர்?-ஆம் அந்தபுளக் தேய்ந்து விட்டது

நீதி: ஜுன் மாதத்தில் மன்னுருக்கு வந்தீர்?-ஆம்

நீதி: மன்னுரில் சீவிக்க தீர்மானித்தீர்?-ஆம்

நீதி: ஊதுபத்தி வியாபாரம்தவிர வேறுவருமானம் வரும் என எதிர்பார்த்தீரா? ஆம்

நீதி: என்ன வருமானம்?-கொழும்பிலிருந்துசாய்ப்புச் சாமான் எடுத்து மன்னுரில் கமிஷன் வைத்துக் கொடுக்க உத்தேசித்திருந்தேன்

நீதி: 67-ம் ஆண்டு பள்ளிவாசல் மூலம் உமக்கு சம்பளம் கொடுத்தார்கள்?-ஆம்

நீதி: அக்கரைப்பற்றில் கொந்தருத்து வருமானம் இருந்தது?-ஆம்

நீதி: மீண்டும்மன்னுருக்கு வந்தபோது ஊதுபத்தி மூலம் தான் வருவாய் இருந்தது?-ஆம்

வழ: ஊதுபத்தி வங்கிவிற்கிறீரா?- அதிகமாக ஓடர் கொடுத்தால் ஊதுபத்தி வாங்கி 'சென்ற்' போட்டுக் கொடுப்பேன்

வழ: ரஹிமின் அழைப்பின் காரணமாகத் தான் மீண்டும் மன்னுருக்குருவந்தீர்?- இல்லை

வழ: ஊதுபத்திக்கதை பொய்என்கிறேன்?- இல்லை

வழ: எத்தனையோ விதமான ஊதுபத்திகள் எங்கும் இருக்கிறது?-ஆம்

வழ: மே 15-ம் தேதி பள்ளிவாசலுக்கு நீர் போகவில்லை?- போனேன்

வழ: ஜும்மா தொழுகையின் போது நீர் இல்லை?-இருந்தேன்

வழ: நீர் கதீஸ் செல்லவில்லை?- சொன்னேன்

வழ. ஆழகக்கோன் அங்கு வரவில்லை?- அவர்வந்தார்

வழ: பள்ளி விருந்தையும் பரிசுத்தமான இடமா?-ஆம்

வழ: எத்தனை விருந்தைகள் உண்டு?-?மூன்று விருந்தைகள்

வழ: இரண்டு விருந்தை என்றுல் சரியா?- இருபக்கமும் இரண்டு விருந்தைகள் முன் பக்கத்தில் ஒன்று!

— —

முசலி, செவ்வாய்

நாஞட்டான் என்னும் கிராமத்தில் விவசாய விஸ்தரிப்பு நிலைய அலுவலகம் ஒன்று புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. முருங்கனில் இருந்துவந்த இந்நிலையம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு இங்குநிறுவப்பட்டது

சைவ மகாசபை பிரதிநிதிகள் நேரில் வந்திருந்து, இந்தப்பணிக்குத்தாங்கள் பணம் வசூலித்து அனுப்புவதாக தெரிவித்தனர். ஹிந்திவகுப்பைச் சேர்ந்த வட இந்தியவர்த்தக ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஓர் அன்பர் 5001 ரூபாய் அளிக்க முன்வந்ததும் பலரும் மகிழ்ச்சியுடன் கரகோஷ ஆரவாரம் செய்து பாராட்டைத் தெரிவித்தனர். அவர்கொடுத்த பணம் அவ்வளவு பெரிதல்ல. வட இந்தியரான அவர் தாம் ஓர் இந்து என்ற முறையில் இப்பணிக்கு உதவி ஆதரிக்க முன்வந்தது இந்த ஸ்தாபனத்துக்கே ஒரு புதிய பலம் வந்தது போல் இருந்தது.

'இந்து' என்பதற்குபதில் ''சைவ மாமன்றம்'' என்று பெயர் வைத்திருப்பின் வட இந்தியாவைச் சேர்ந்தவர் இந்த விழாவுக்கே வந்திருக்க முடியுமா? அவர்களது ஒத்துழைப்பும் ஆதரவும் கிடைக்குமா? இங்கு ஹிந்திக்காரர் எண்ணிக்கை குறைவுதான் என்றுலும் அவர்களில் பலர் செல்வந்தர்கள் இந்து

## புடவை ...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கோவில் மேற்கு வீதிக்கு மாற்றப்பட்டுள்ளது. சைக்கிள் திருத்துவதில் 40 வருடமாக யாழ். நகரில் பிரசித்தி பெற்ற இந்த ஸ்தாபனத்தில் புதிய சைக்கிள்களும் சைக்கிள் உதிரிப்பாகங்களும் நியாய விலையில் விற்பனை செய்கிறுர்கள். கோஷ்டியாகவோ குடும்பமாகவோ உள்ளூர் யாத்திரை செய்ய அல்லது விசேஷ வைபவங்களுக்குச் செல்ல விரும்புபவர்களுக்கு வான் சேவை இங்கு கிடைக்கும். இதன் உரிமையாளர் திரு. பேதுறுப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை உத்தரவுபெற்ற ஒக்ஷனீயரும் புறேக்கருமாவார்.

### பிறதர் ஏஜென்ஸீஸ்

பிறதர் மெஷீன் ஏஜென்ஸீஸ் உரிமையாளர் திரு. பி. பஸில். எல்லாவகை மெஷீன் திருத்த வேலைகளும் தமது ஸ்தாபனத்தில் ஏற்கப்படுமென்றும் 'கிளாஸியோ' குளிர்சாதனப் பெட்டிகளும் தமது ஸ்தாபனத்தில் பெற்றுக்கொள்ளலாமென்றும் வீட்டுத்தளபாடங்களும் விரைவில் தமது ஸ்தாபனம் கட்டுப்பண முறையில் வழங்கவிருப்பதாகவும் திரு. பஸில் தெரிவிக்கிறுர். நல்லூர் உற்சவ காலத்தில் பிறதர் மெஷீன் காட்சிச்சாலையாயிருந்து பல்லாயிரக்கணக்காஞேரும் பார்த்துச் சென்ற அதே இடத்தில் தான் பிறதர் ஏஜென்ஸீஸ் இருக்கிறது.

எதுதான் நடவாது?

இந்து சமூகத்தில் பலபல விதமான கலாசாரங்கள் உண்டு. அதில் தலைசிறந்தது சைவ கலாசாரமே. சைவர்களே அதை மெதுவாக மறந்து வருகிறுர்கள். இது துரதிருஷ்டம். சைவராகப் பிறந்துவிட்டால் ஒருவர் சைவராகிவிடமாட்டார். சைவப் பண்புகளுடன் வாழ்ந்தாலே அவர் உண்மையான சைவராவார். அன்பும் சிவமும் இரண்டல்ல அன்புதான் சிவம். அன்பை அடிப்படையாகக் கொண்ட வாழ்வே சைவ வாழ்வு. அவ்விதம் சைவர்களும் இந்துக்களும் வாழ ஆரம்பித்துவிட்டால், இந்து சமூகம் இன்பநிலை அடையத் தடை என்ன? அன்பு எங்குள்ளதோ அங்குதான் இன்பம்உண்டு. இந்து மாமன்றத்தினர், அன்பை வளர்க்கும் பணிகளில் எவ்வளவுக் கெவ்வளவு ஈடுபடுகிறுர்களோ, அவ்வளவும் அச்சமூகம் இன்பமாக வாழ வழி செய்வதாகும்.

0 0 0

பரசு பாணியர் பாடல் வீணையர்
பட்டினத்துறை பல்லவனீச்சரத்
தரசு பேணி நின்றுரிவர் தன்மையறிவாரார்.

சம்பந்தர்

# மரண அறிவித்தல்

## கே. பாலசுப்பிரமணியம் (M.P.H,)

யாழ்ப்பாணம் S. H. S. கந்தோரைச் சேர்ந்த சுகாதாரப் போதஞசிரியர் திரு கே. பாலசுப்பிரமணியம் M. P. H, காலமாகிவிட்டார் இவர் திருமதி ஞானசௌந்தரியின் அருமைக் கணவரும்மஞேரஞ்சினி தேவரஞ்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற எம். சுவாமிநாதரின் மருமகனும் கே. விஞயகமூர்த்தி (V,C.O. Irrigation Vavuniya) கொழும்பு பெரியாஸ்பத்திரியைச் சேர்ந்த விஜயரட்ணம் M. L, T. ஆகியவர்களின் சகோதரருமாவார். அன்னரது பூதவுடல் இன்று (21-10-70) பி. ப. 3 மணிக்கு கோப்பாய் கிருவானை ஒழுங்கையிலிருந்து ஈமக் கிரிகைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். 2144

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org